வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.06.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 200 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



# நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா முழு ஆதரவு!

## வெளிவிவகாரச் செயலாளர் வினய் ஜனாதிபதி கோட்டாபயவிடம் உறுதி

கொழும்பு, ஜூன். 24

**நெருக்கடியான சூழ்நிலையைச் சமாளிக்க இலங்கைக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் குவாத்ரா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.**

**இந்திய வெளிவிவகார செயலாளர் தலைமையிலான குழுவினர் நேற்று கொழும்பில் ஜனாதிபதியை சந்தித்தனர்.**

வெளியுறவுச் செயலாளருடன் இந்திய நிதி அமைச்சின் பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலர் அஜய் சேத், இந்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி. ஆனந்த நாகேஸ்வரன் உட்பட்டவர்கள் சந்திப்பில் பங்கேற்றனர்.

ஏற்கனவே வழங்கப்பட்ட எரிபொருள், மருந்து, உரம் மற்றும் பிற அத்தியாவசிய உதவிகளை மதிப்பாய்வு செய்த இந்திய பிரதிநிதிகள், இலங்கைக்கு ஆதரவளிக்க இந்திய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக இதன்போது குறிப்பிட்டனர்.

இந்த நிலையில் நாட்டுக்கு வழங்கும் உதவிகளுக்காக இந்திய அரசாங்கத்துக்

15

# மக்களின் அழுத்தங்களால் உள்நாட்டு போர் ஏற்படலாம்

## வாசுதேவ நாணயக்கார எம். பி.

கொழும்பு, ஜூன் 24

மக்களால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களால் நாட்டில் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட ஆரம்பிக்கலாம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் மற்றும் உரங்களைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்

15

# ஜப்பான் பாட புத்தகத்தில் மகிந்தவுக்கு இடமளிப்பு!

கொழும்பு, ஜூன் 24

எதிர்கால சந்ததியினருக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்து, தனது தனிப்பட்ட செல்வத்தைக் கொண்டு நடமாடும் நூலகத்தை நடத்தும் இலங்கையில் ஓர் அற்புதமான மனிதனின் கதை ஜப்பானிய பாடப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

32 வயதான மகிந்த தசநாயக்க தனது சொந்த செலவில் பழுது பார்த்த நூலகத்தை சொந்தமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்வதோடு, விடுமுறை நாட்களில் தான் வசிக்கும் கிராமம் மற்றும் சுற்றுவட்டார

15

# அமைச்சர்கள், எம்.பிக்கள் காப்புறுதி செய்ய ஆர்வம்!

கொழும்பு, ஜூன் 24

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் தங்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்கு காப்புறுதி செய்ய விரும்புகின்றனர் என்று தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் வீடுகளுக்கு காப்புறுதி முகவர்கள் அடிக்கடி செல்கின்றனர் என்றும், முகவர்களிடம் அமைச்சர்களும் எம். பிக்களும் காப்புறுதிகள் தொடர்பான முன்மொழிவுகளை பெறுகின்றனர் எனவும் தெரிய வருகின்றது.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளின் பின்னர் ஏற்பட்ட அச்சம் காரணமாக

15

# நடந்தது இனப்படுகொலை; ஏற்க மறுக்கிறது ஈ. பி. டி. பி.

நல்லூர், ஜூன் 24

இறுதிப் போரின் போது நடந்தது இனப்படுகொலை என்று நல்லூர் பிரதேச சபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது என்று வெளியான தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்று ஈ. பி. டி. பி. தெரிவித்துள்ளது. அத்துடன், இந்தத் தீர்மானத்தை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அந்தக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் பிரதேச சபையில் ஈ. பி. டி. பி. கட்

15

# எரிபொருட்கள் விலையுயர்வு?

## பெற்றோல் ரூ. 74, டீசல் ரூ. 56 , ம.எண்ணெய் ரூ. 210 ஆல் உயர்வு

கொழும்பு, ஜூன் 24

இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும்வகையில் நள்ளிரவு 12 மணி முதல் எரிபொருட்கள் மீளவும் விலையுயர்ந்தன. எனினும், இந்தச் செய்தி அச்சுக்கு போகும்போது இந்தத் தகவல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இலங்கை பெற்றோலிய கூட்டத்தாபனத்தின் உயர்மட்ட தகவல்களின் பிரகாரம் 92 ஒக்ரெய்ன் பெற்றோல் 74 ரூபாயாலும், 95 ஒக்ரெய்ன் பெற்றோல் 78 ரூபாயாலும் மண்ணெண்ணெய் 210 ரூபாயாலும், டீசல் 56 ரூபாயாலும் சுப்பர் டீசல் 65 ரூபாயாலும் அதிகரிக்கின்றன.

15

# எரிவாயு கப்பல்கள் ஜீலை வருகின்றன

கொழும்பு, ஜூன் 24

7000 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவுடன் இரண்டு கப்பல்கள் நாட்டுக்கு அடுத்த மாதம் வரும் என்று லிற்றோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டில் எரிவாயுவுக்கு தொடர்ந்து தட்டுப்

15

# எரிபொருள் நிலையத்தில் தாக்கப்பட்ட இளைஞர் பலி!

## யாழ்ப்பாணத்தில் சோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்கப்பட்டார் என்று கூறி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

15

# குருந்தூர் மலை விவகாரம்: வழக்கு மீளவும் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 24

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை, பொலிஸாரின் மேலதிக விளக்கத்துக்காக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் கடந்த 12ஆம் திகதி புத்தர் சிலையை நிறுவ முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அத்துடன்,

15

## இப்படியும் நடக்கிறது...!

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்திலும் அங்கங்கே மக்கள் எரிபொருளுக்காக முட்டி மோதுவதைக் காணமுடிந்தது.

ஒவ்வோர் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பல கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் தத்தமது மோட்டார் வாகனங்களுடன் வரிசையில் நிற்கின்றனர்.

வெளிநாட்டிலிருந்து வரும் உறவினர் ஒருவரை விமானநிலையம் சென்று அழைத்துவரவேண்டியிருந்தது. பல வருடங்களின் பின்னர் தாயகம் வருகின்ற அந்த உறவினர்களை பெற்றோல் இல்லாததால் பஸ்ஸில் கொண்டுவரவேண்டி வந்தது என்றால், அவர்களுக்கு ஏனடா வந்தோம் என்ற மனநிலை வந்துவிடலாம் என்ற பயம்வேறு. கொழும்பிலிருந்தும் யாரும் வர தயாராக இல்லை. அங்கிருந்து இங்கு வந்தால், இங்கு பெற்றோல் கிடைத்தால்தானே அவர் திரும்பி கொழும்பு செல்லலாம்.

இங்கிருந்து ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு செல்ல விரும்பினேன். ஓர் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருடன் பேசி, வானகத்திற்கு எரிபொருள் நிரப்ப ஏற்பாடு செய்தாகிவிட்டது. அவர் இரவு பதினொரு மணிக்கு பின்னர் வாருங்கள். யாரும் இல்லாத நேரத்தில் தர முயற்சி செய்கின்றேன் என்றார்.

இரவு பதினொரு மணிக்கு அவரது எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்றால், அங்கே பாய்போட்டு படுத்திருக்கின்றனர் பலர். வரிசையில் வாகனங்களை நிறுத்திவிட்டு அருகே படுத்திருக்கின்றனர்.

அருகே சென்றபின் உரிமையாளருக்கு தொலைபேசி எடுத்தபோது அவர், 'இப்போது உங்கள் வாகனம் வருகின்ற சத்தம்கேட்டு படுத்திருப்பவர்கள் எழும்பி, வாகனத்திற்கு பெற்றோல் நிரப்புவதைக் கண்டால், வாகனத்தையே அடித்து நொருக்கிவிடுவார்களோ தெரியவில்லை' என்று எச்சரித்தார். வேறு வழியின்றி வீடு திரும்ப வேண்டியதாகிவிட்டது.

இதுதான் இன்றைய எரிபொருள் நிலைமை.

யாழ்ப்பாணத்தில் எத்தனை லட்சம் மோட்டார் சைக்கிள்கள் இருக்கும் என்பது தெரியவில்லை. ஆனால், பல வீடுகளில் இரண்டு அல்ல மூன்றும் இருக்கின்றன.

ஒரு நகரத்திற்கு அல்லது இடத்திற்கு ஓர் அடையாளத்தையே அதன் 'லான்ட் மார்க்' ஆக பயன்படுத்துவார்கள். பாரிஸ் நகரம் என்றால் அதன் அடையாளம் 'ஈபில் ரவர்'. லண்டன் என்றால் தேம்ஸ் நதியிலுள்ள 'லண்டன் பிரிட்ஜ்'. இப்படி, யாழ்ப்பாணம் என்றால் பொது நூலகம் இருந்தது. இப்போதும் இருக்கின்றது. அதைவிட, யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்தில் ஒரு 'லான்ட் மார்க்' இருந்தது. அது, பெண்கள் சைக்கிள் ஓடுகின்ற காட்சி. யாழ்ப்பாணத்தைப்போல வேறு எங்குமே பெண்கள் அவ்வாறு சைக்கிள் ஓடுவதைக் காணமுடியாது.

ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. 'ஸ்கூட்டி' ஓடாவிட்டால் மரியாதை இல்லை என்ற நிலைமை.

இதனால் இப்போது, அந்தக் காலத்தில் சைக்கிள்கள் விலத்திக்கொண்டு போனதுபோல இப்பொழுது 'ஸ்கூட்டிகள்' நம்மை விலத்தி ஓடிச்செல்கின்றன.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட தொடங்கியபோது தெற்கில் மக்கள் தத்தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்காக, அத்தியாவசிய பொருட்களை பெறுவதற்காக கியூவில் நின்றனர். அவை கிடைக்காதபோது, அதற்கு எதிராக கிளர்ந்து எழுந்தனர்.

அப்போதெல்லாம், இது எங்களுக்கு பழக்கப்பட்ட ஒன்று. நாங்கள் இதுபோன்ற பல நெருக்கடிகளைக் கடந்து வந்தவர்கள் என்று மார்தட்டிய நம்மவர்கள், இப்போது எரிபொருளுக்காக காத்திருக்கின்றபோது சலித்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

சமூக ஊடகங்களில் ஒவ்வொருவரும் இந்த எரிபொருள் நெருக்கடியை எப்படி சமாளிக்கலாம் என்று வகுப்பெடுக்கவும் தொடங்கியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் யூலை முதலாம் திகதியிலிருந்து பங்கீட்டு அட்டை முறையில் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

'நல்ல விசயம்தான். ஆனால், ஒவ்வொரு வாகனங்களுக்கும் ஒவ்வோர் அட்டை விநியோகிக்கப்பட்டால் நல்லதுதான்' என்று இதுகுறித்து கருத்துச் சொன்ன முகநூல் போராளி ஒருவரின் கருத்தையும், அது முகநூல் கருத்துத்தானே என்று கடந்து செல்ல முடியவில்லை.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அதன் பதிவுகளை கணனிமயப்படுத்தி வைத்திருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் எத்தனை வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. அவை எந்த எந்த வகையைச் சேர்ந்தவை என்ற முழு விபரங்களையும் அந்தத் திணைக்களம் ஒரு நொடுக்கில் சொல்லிவிடக்கூடிய நிலையில் இருக்கின்றது.

அந்த திணைக்களமே இதற்கான அட்டைகளை கணனி மயப்படுத்திய நிலையில் வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கினால்தான் அது குறித்து முறைப்பாடு கிடைக்க சந்தர்ப்பம் இல்லாமல்போகும். அதைவிடுத்து, வானப்பதிவு, காப்புறுதி போன்ற பத்திரங்களுடன் சென்று பங்கீட்டு அட்டைகளை பெறுவதெனில், ஒரு வாகனத்திற்கு குடாநாட்டிலுள்ள பதின்நான்கு பிரதேச செயலகங்களிலும் பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுவிடக்கூடிய கில்லாடிகள் நம்மத்தியில் இருக்கின்றார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் விழிப்பாக இருக்காவிட்டால், சட்டவிரோத எரிபொருள் வர்த்தக 'நெற்வேர்க்' நீண்டுகொண்டே செல்வதை தடுக்கமுடியாது போய்விடும்.

ஏனெனில், ஆயிரம் ரூபாவுக்கு ஒரு லீட்டர் பெற்றோல் வாங்க நீங்கள் தயாராக இருந்தால், எத்தனை லீட்டர்களையும் எப்போதும் வாங்கக்கூடிய அளவிற்கு அது அந்த நெற்வேர்க்கிடம் இருக்கின்றது.

- ஊர்க்குருவி

*ரயர் தட்டுப்பாட்டால்*

## 600 இ. போ. ச. பேருந்துகள் சேவையிலிருந்து நிறுத்தம்!

கொழும்பு, ஜுன் 24

வாகனங்களுக்கான ரயர் தட்டுப்பாட்டால் நாடு முழுவதும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 600 பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விநியோக நிறுவனங்கள், குறித்த ரயர்களுக்கு அதிக விலையை கோரும் நிலையில், அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளமையால் பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹங்ச, ரயர்கள் கிடைப்பதில் தொடர்ந்தும் தாமதம் நிலவுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் பேருந்துகளுக்கு, அரச பேருந்து சாலை எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருளை தொடர்ந்தும் வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

(ஐ)

## லண்டனில் நாளை எண்மருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

லண்டன், ஜுன் 24

ஐக்கிய இராச்சியம் அறிவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை நடைபெறும் 'கம்பவாரிதி ஜெயராஜுடன் ஒரு இனிய மாலைப் பொழுது' நிகழ்ச்சியில் பல்வேறு துறைகள் சார்ந்த எண்மருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது.

மத, சமூக சேவைகளுக்காக மருத்துவர் எஸ். நவரத்தினம், எஸ். கருணைலிங்கம், கே. விவேகானந்தன் ஆகியோரும், நூல் தேட்டம், எண்ணிமப்படுத்தலுக்காக இ. பத்மநாப ஐயர், விளையாட்டு ஊக்குவிப்புக்காக ரி. பிரபாகரன், சமூக சேவைக்காக ஏ. ஆர். சிறிதரன், விளையாட்டு சாதனைக்காக நிக் கபில் ஷாந் செல்வராசா, தெற்கு ஆசிய நுண்கலை சேவைக்காக திருமதி மேனகா ரவிராஜ் ஆகியோர் இந்த விருதைப் பெறுகின்றனர்.

வெம்பிளி, அல்பேட்டன் சமூக பாடசாலை மண்டபத்தில் நாளை மாலை 6.30 மணிக்கு நடைபெறும் கம்பன் கழக 'நிமிர்வு' கிளிநொச்சி கட்டட நிதி உதவி நிகழ்ச்சியில் இந்த விருது வழங்கல் இடம்பெறுகிறது.

(ஐ)

## சுதந்திர கட்சி - நிமால் இணக்கத்தை எட்டினர்

கொழும்பு, ஜுன் 24

சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் தாம் வகிக்கும் பதவிகளில் இருந்து தன்னை நீக்கியமை தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு எதிராக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தாக்கல் செய்திருந்த வழக்கு தீர்க்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்துக்கு வெளியே சமரசம் செய்து கொள்ள இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்ததையடுத்து, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் பதவியில் இருந்து நீக்கிய சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் முடிவின் மீதான தடையை நீதிபதி நீக்கினார்.

கொழும்பு மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக அமைச்சுப் பதவியை வகித்தமைக்காக அமைச்சர் டி சில்வாவை கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி சில வாரங்களுக்கு முன்னர் அறிவித்தது.

இதன்படி அமைச்சர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரி மனுவொன்றை தாக்கல் செய்தார்.

(ஐ)

## எரிபொருள் பெறும் வரிசையை வாடகைக்கு விட்டார் இளைஞன்

மட்டக்களப்பு, ஜுன் 24

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபாருள் தட்டுப்பாடு காரணமாக பல துறைகளும் ஸ்தம்பிதமடைந்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலே இரவு பகலாக மக்கள் நீண்ட வரிசையில் எரிபொருளுக்காக காத்திருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் மட்டு நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் எரிபொருள் வரிசைக்காக காத்திருந்த இளைஞர் ஒருவர் தான் நின்ற இடத்தை வாடகைக்கு வழங்கவுள்ளதாக கதிரை ஒன்றில் விளம்பரத்தை காட்சிப்படுத்தியுள்ளதுடன் தேவையானவர்கள் தன்னை தொடர்பு கொள்ளுமாறும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இளைஞனின் இந்த செயல் சமூகவலைத்தளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகின்றது.

(அ)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜுன் 24

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 26ஆவது சொற்பொழிவு சண்டிலிப்பாய் இந்து ஆகம நவீன கலை, கலாசார நிறுவன அறநெறிப் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இதில், "சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை நாவலர்" எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

(ஐ)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஜுன் 24

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "திருவாசகம் என்னும் தேன்" என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

(ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜுன் 24

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி பளை மாசார் சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரமஸ்ரீ த. தனேஸ் வரசர்மா கோயிலின் பிரதம குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும்.

(ஐ)

Eelanadu ஈழநாடு
24.06.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மற்றவர்களை குற்றம்சாட்டும் அரசியல்?

சுயாதீன பாராளுமன்ற அணியின் பிரதான குரலான விமல் வீரவன்ஸ, கொழும்பு காலிமுகத்திடலில் எதிர்ப்பு நடவடிக்கையை கட்டுப்படுத்தும் விடயத்தில், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தலையீடு செய்கிறாரெனக் குற்றம்சாட்டியிருக்கின்றார். அவரின் தலையீட்டின் காரணமாகவே, பொலிஸாரால் நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போனதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். இது சிங்கள கடும்போக்குவாதிகளின் வழமையான அரசியல் சுலோகமாகும்.

அதாவது, அமெரிக்கா மற்றும் இந்தியாவை குற்றம்சாட்டுவதை ஒரு தொழிலாகவே சிலர் கைக்கொண்டு வருகின்றனர். தங்களால் விடயங்களை கையாள முடியாமல் போகின்றபோது, வெளிநாடுகள்மீது குற்றம்சாட்டுவதன் மூலம் தங்களின் இயலாமையை மறைக்க முயல்வதுண்டு. இப்போது விமல் வீரவன்ஸ கூறியிருப்பதும் அப்படியான ஒன்றுதான். முதலில் காலிமுகத்திடலில் 'அரகலய' எதனால் ஏற்பட்டது? இப்போதும் அது எதனால் தொடர்கின்றது? இந்தக் கேள்விகளுக்கு பதில் தேடாமல், அமெரிக்க தூதுவர்மீது குற்றம்சாட்டுவதால் பயனில்லை. ஜனாதிபதி கோட்டாபய வீட்டுக்கு செல்ல வேண்டுமென்பதே, 'அரகலய' போராட்டக்காரர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது. அது, இன்னும் நிகழவில்லை. எனவே, அவர்கள் தொடர்ந்தும் அங்கிருக்கின்றனர். அதேவேளை, அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே கூறியிருக்கின்றார். பிறகெதற்கு அமெரிக்க தூதுவர் தலையீடு செய்ய வேண்டும்?

இதேபோன்றுதான், இலங்கையில் புரையோடிப்போயுள்ள தமிழர் பிரச்னைக்கு, நியாயமான தீர்வைக் காண்பதற்கு, முயற்சிக்காமல், இந்தியா உள்நாட்டு விடயத்தில் தலையீடு செய்வதான குற்றச்சாட்டையும் அடிக்கடி காண முடிகின்றது. அண்மையில்கூட, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்தியா, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு அழுத்தங்களை பிரயோகிக்கலாம் - என்றவாறான கதைகளை சில சிங்கள கடும்போக்குவாதிகள் கூறியிருந்தனர். 13ஆவது திருத்தச்சட்டம் என்பது, இலங்கையின் அரசியல் யாப்பு. அரசியல் யாப்பை முறையாக ஆட்சியாளர்கள் நடைமுறைப் படுத்தியிருந்தால், பின்னர் எதற்காக இந்தியா இந்த விடயத்தை முன்வைக்கப் போகின்றது? சிங்கள - பௌத்த தேசியவாதத்தை வைத்து அரசியல் செய்ய முற்படுபவர்கள், ஒருபோதுமே அறிவுபூர்வமாக சிந்திப்பதில்லை. இதுதான் அடிப்படையான பிரச்னையாகும்.

தமிழ் சூழலிலும் இந்த நோயுண்டு. விடயங்களை கையாள முடியாமல் போகின்ற போது - தோல்வியை எதிர்கொள்கின்றபோது, தமிழ் வீரவன்ஸக்கள், மற்றவர்கள்மீது குற்றம்சாட்டுவதுண்டு. தமிழர் அரசியலில், ஆயுதப் போராட்டம் மேலாதிக்கம் செலுத்திய காலத்தில், ஓர் இயக்கம் பிறிதோர் இயக்கத்தை குற்றம்சாட்டுவதாக ஆரம்பித்த இவ்வாறான அரசியல்போக்கு, பின்னர், துரோகிகள் என்னும் அடைமொழிக்குள் விடயங்களுக்கு தீர்வு தேடுவதாக மாறியது. விமர்சனங்களுக்கு பதிலில்லாத போது, அதனை எதிர்கொள்வதற்கு, துரோகிகளென்று மற்றவர்களைக் குற்றசாட்டிவிட்டு தப்பித்துக் கொள்ளும் போக்கு தாரளமாகியது. இன்றும் இந்தப் போக்கு, இல்லாமல் போய்விடலில்லை. தேர்தல் காலத்தில், துரோகி, கூலிப்படை, காட்டிக்கொடுப்பு என்னும் சொற்களுக்குள் அரசியல் தஞ்சம் கோருவதை காணலாம். குறிப்பாக, இந்தியாவுடன் தொடர்புபடுத்தி, மற்றவர்களை விமர்சிக்கின்ற போக்கொன்று, தமிழ்த் தேசிய அரசியலில் இப்போதும் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஆறு கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதிய போது, அதனை எதிர்த்தவர்கள், இந்தியாவின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இவ்வாறான விடயங்களை மேற்கொள்வதாகக் குற்றம்சாட்டியிருந்தனர். தென்னிலங்கையில் விமல் வீரவன்ஸ போன்றவர்கள் அமெரிக்காவின்மீது முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்களுக்கும், யாழ்ப்பாணத்தில், ஒரு தரப்பினர், இந்தியா தொடர்பிலும் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் அடிப்படையில் வேறுபாடில்லை. உண்மையில் இவ்வாறான குற்றச் சாட்டுக்களில் திருப்திகாணும் அரசியலானது, அடிப்படையில், விடயங்களை கையாள முடியாமையின் விளைவாகும், இதேவேளை மக்களுக்கு சொல்வதற்கு சரியான மாற்றுத்திட்டங்கள் இல்லாத போது, மற்றவர்களை குற்றம் சாட்டுவதன் மூலம், தங்களின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அற்ப முயற்சியாகும். ஆனால், உண்மையோ கசப்பானது. அதாவது, வெளிநாட்டவர்களை குற்றம்சாட்டும் எவருமே, சொந்த மக்களுக்காக எதையும் செய்ய முடியாதவர்களாவர்.

# இலங்கையில் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள்!

**அலசுவது இராஜதந்திரி**




இலங்கையில் சர்வதேச நாணய நிதியத் தின் பத்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று தனது கள ஆய்வினை மேற் கொண்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை சர்வ தேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை வந்திருந்தனர்.

இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவைச் சந்தித்து நாட்டின் தற்போதைய நாட்டு நிலவரம் தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பித்திருந்தனர்.

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள ஆரம்பித்த பின்னர், ஒரு முக்கியமான - சர்வதேச நிதியத்தின் நிறுவ னத்தின் பிரதிநிதிகள் இலங்கை வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

22 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் எரிபொருளுக்காகவும், சமையல் எரிவாயுவுக்காகவும் தற்சமயம் வீதிகளில் நீண்ட வரிசைகளில் நின்று வருவதையே காணமுடிகின்றது.

இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்னர் எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியாகவே தற்போதைய நெருக்கடி விளங்குகின்றது. இலங்கையில் மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தம் நிலவிய போது பாதுகாப்புத்துறைக்கு அதீத நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் நாட்டின் பொருளாதாரம் இன்றிருப்பது போல மோசமான நிலையை எட்டியிருக்கவில்லை.

ஆனால், தற்போது சர்வதேச நாணய நிதிதயத்தின் நிறுவனப் பிரதிநிதிகளே கள ஆய்வை மேற்கொள்ளும் விதத்தில் நிலைமை மோசமடைந்துள்ளது. இலங்கைக்கு உதவிகளை வழங்குவது தொடர்பாக ஆராய சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் கொழும்பு வந்துள்ள போதிலும் இலங்கைக்கு உடனடியாகவே உதவிகள் கிடைக்கும் என்று குறிப்பிடுவதற்கில்லை. ஏனெனில், இலங்கை கடந்த ஏப்ரலில் தான் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு கடன் தொகையில் 12 பில்லியன் அமெரிக்க டொலர்களை திருப்பிச் செலுத்துவதை இடை நிறுத்தியுள்ளது. அத்துடன், இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளிடமும் இலங்கை அதீத கடன்களைப் பெற்றுள்ளது. எனவே, இந்தக் கடன் தொகையை இலங்கை திருப்பிச் செலுத்த சிரமங்களையே எதிர்நோக்கும் இத்தகைய பின்னணியில் சர்வதேச நாணய நிதியம் எடுத்த எடுப்பிலேயே கடன் உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.


இலங்கையின் இன்றைய நிலைக்கான மூலகாரணம் பற்றி தீர ஆராய்ந்தே சர்வதேச நாணய நிதியம் தனது தீர்மானங்களை எடுக்கும். இதனை நன்கறிந்த நிலையிலும் சர்வதேச கடன் உதவிகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை உணர்ந்த நிலையிலுமே இந்தியா வழங்கி வருகின்ற நிதி உதவிகளுக்கும் ஓர் எல்லையுண்டு என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆகவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எவ்வாறு பயன்படுத்துகின்றார் என்பது தற்சமயம் நன்கு புலனாகியுள்ளது. தமது சகோதரரும் முன்னாள் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களால் புறந்தள்ளப்பட்ட நிலையில் சர்வதேச சமூகத்தினால்கூட ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவரல்ல என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிந்துள்ளதால் சர்வதேச சமூகத்தை கையாள பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்துள்ளமை சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளின் கொழும்பு விஜயம் அவர்களின், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சு என்பவை எடுத்துக்காட்டுகின்றன.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளின் கொழும்பு வருகையின் பின்னணியிலேயே இந்திய வெளியுறவு செயலாளர் சிறி வினய் குவாட்ரா தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு நேற்று விஜயம் செய்திருந்தது. இலங்கைக்கு மிகக்குறுகிய நேர அட்டவணையில் விஜயம் செய்த குழு என்று கூறுமளவுக்கு இந்திய வெளியுறவு செயலாளரின் நேற்றைய கொழும்பு விஜயம் மூன்று மணிநேரமே கொழும்பில் இடம்பெற்றிருந்தது. இதன் மூலம் இலங்கையின் இன்றைய நிலவரம் எத்தகையது என்பதை முன்கூட்டியே அறிந்த நிலையில் ஒரு குறுகிய கள ஆய்வாகவே இந்திய வெளியுறவு செயலாளரின் கொழும்பு விஜயம் நேற்று இடம்பெற்றிருந்தது.

இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் போதே ஹொரண பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் டீசல் எரிபொருள் பெறுவதற்காக வரிசையில் காத்து நின்றபோது ஒருவர் மயங்கி விழுந்து மாரடைப்பினால் நேற்று மதியம் காலமானார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இறந்தவருக்கு வயது 63 ஆகும். இவரின் மரணத்தோடு சேர்த்து எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் காத்திருந்து மரணித்தவர்களின் எண்ணிக்கை பதினாறாக உயர்ந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



| | |
|---|---|
| ஜூன் - 24 | வெள்ளிக்கிழமை |
| சுபகிருது வருடம் - | ஆனி 10 |
| நல்ல நேரம் : | 09.00 - 10.30 |
| ராகு காலம் : | 10.30 - 12.00 |
| திதி : | ஏகாதசி |




**மேடம்**
விசேஷம் விருந்து என பங்கேற்பீர்கள். மாலையில் மகிழ்ச்சியான செய்தி உங்களைத்தேடி வரும். பயணம் ஏற்பட்டாலும் அதனால் அலைச்சலும், ஆதாயம் உண்டாகும்.

**இடபம்**
திடீர் சுபச்செலவு ஏற்படும் . விழிப்புணர்வு தேவை. உறவினர் வீட்டு நிகழ்ச்சிகளில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள். உங்கள் செயலில் கவனம் தேவை. அலைச்சலும் செலவும் அதிகரிக்கும்.

**மிதுனம்**
முயற்சி வெற்றியாகும். வேலை வாய்ப்பிற்காக முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பதில் வரும். நண்பர்களின் உதவியுடன் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**
தொல்லை கொடுத்தவர்கள் விலகிச் செல்வர். நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உங்கள் கைமேலோங்கும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள்.

**சிம்மம்**
இரண்டு நாட்களாக இருந்த சங்கடம் விலகும். உங்கள் முயற்சி பலிக்கும். நெருக்கடி விலகும். நன்மையான நாள். காலையில் அலைச்சல் அதிகரித்தாலும் அதனால் உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள்.

**கன்னி**
மகிழ்ச்சியான சம்பவம் ஏற்படும். சிறுசிறு தடை செயலில் உண்டாகும். உங்கள் செயலில் கவனம் தேவை. வீண் அலைச்சல், செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சி வேண்டாம். பணிகளில் கவனம் தேவை.

**துலாம்**
நண்பர்களின் வழியே நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாலினரின் அன்பிற்கு ஆளாவீர்கள். பணம் செலவாக வாய்ப்புண்டு. மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
துணிச்சலுடன் செயல்பட்டு ஒரு வேலையை முடிப்பீர்கள். மேலதிகாரி பாராட்டுவார். உங்கள் செயல்களில் இருந்த தடை விலகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பலன் உண்டு.

**தனுசு**
தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர். பழைய நட்புகளால் சில பிரச்னைகளை சந்திக்க நேரும். எச்சரிக்கைத் தேவை. உங்கள் செயல் இழுபறி ஆனாலும் போராடி வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
விழிப்புணர்வு தேவை. பொது நிகழ்ச்சிகளில் கவனம் தேவை. வம்பு, வழக்கு வேண்டாம். உங்களுடைய செயலில் பின்னடைவு ஏற்படும். மனம் சோர்வடைய வேண்டாம்.

**கும்பம்**
உங்கள் முயற்சி வெற்றியாகும். மற்றவர்களுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். துணிச்சலும், தைரியமும் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும்.

**மீனம்**
பணம் பொருள்களைக் கையாளுவதில் கவனம் தேவை. விழிப்புணர்வுடன் அவசியம். பிறர் மீதும் அனுதாபம் கொண்டு உதவி செய்வீர்கள். தெய்வீக சிந்தனை மேலோங்கும். உங்களுக்குப் பிரியமானவர்கள் விலகிச் செல்வர்.

# அ. தி. மு.க. பொதுகுழுக் கூட்டம் 30 நிமிடங்களிலேயே முடிந்தது!

## - பன்னீர்செல்வம் வெளிநடப்பு -

சென்னை, ஜூன் 24

பலத்த எதிர்பார்ப்புகளுடன் நேற்றுக் காலை தொடங்கிய அ. தி. மு. க. கட்சியின் பொதுக் குழு, அடுத்த பொதுக் குழு கூட்டத்துக்கான திகதி அறிவிப்புடன் நிறைவு பெற்றது.

அ. தி. மு. கவின் ஒற்றைத் தலைமை என்ற கோரிக்கை பொதுக் குழுவில் ஏற்கப் பட்டதைத் தொடர்ந்து, எடப்பாடி பழனி சாமிக்கு அ.தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர்கள் பலரும் பூங்கொத்துகளையும், மலர் மாலைகளையும் அறிவித்து தங்கள் வாழ்த்துகளை பரிமாறினர். பிறகு, எடப்பாடி பழனிசாமிக்கு வெள்ளிக் கிரீடமும், வீரவாளும் வழங்கப்பட்டன.




சென்னை வானகரத்தில் நேற்று நடைபெற்ற அ. தி. மு. க. பொதுக் குழுக் கூட்டம், ஒற்றைத் தலைமை என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டதும், அந்த கோரிக்கை ஏற்கப்பட்டு, அடுத்த பொதுக் குழுக் கூட்டம் வரும் ஜூலை 11ஆம் திகதி நடைபெறும் என அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன் அறிவித்தார். இந்த அறிவிப்புக்கு இடையே, கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் மேடையிலிருந்து இறங்கி, கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

பிறகு, மேடையில் பேசிய முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி, ஒற்றைத் தலைமையாக எடப்பாடி பழனிசாமியை மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்று அறிவித்தார்.

கடுமையான எதிர்பார்ப்புகளுடன் நேற்று முற்பகல் 11.30 மணிக்குத் தொடங்கிய அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் சலசலப்பு, கோஷங்கள், எதிர் கோஷங்கள், நிராகரிப்பு, ஆதரவு என சுமார் அரை மணி நேரத்தில் நிறைவு பெற்றது.

# தி.மு.கவை அழிக்க நினைத்தோர் இன்று அழிந்துபோயுள்ளார்கள்!

## முதலமைச்சர் ஸ்ராலின்

சென்னை, ஜூன் 24

தி.மு.க.வை அழிக்க நினைத்தவர்கள்தான் அழிந்து போயுள்ளனர் என்று முதலமைச்சர் ஸ்ராலின் கூறியுள்ளார்.

திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இந்த இவ்வளவு பெரிய மண்டபத்தில் நம்முடைய வீட்டு திருமணம் நடப்பதை எண்ணி நாமெல்லாம் கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியில் வாழ்த்திக் கொண்டு இருக்கிறோம். பக்கத்தில் இன்னொரு திருமண மண்டபத்தில் என்ன நடக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். நான் அந்த பிரச்னைக்கெல்லாம் போக விரும்ப வில்லை.

இது நம்முடைய வீட்டு திருமணம். எனவே அதில் நாம் தலையிட வேண்டிய அவசியமே இல்லை. ஆனால், அவர்கள் தான் நம்மை அழிக்க முடிவு செய்து இருக்கிறார்கள். தி.மு.க.வை அழிக்க நினைத்தவர்கள்தான் அழிந்து போய் இருக்கிறார்கள். தி.மு.க. அழிந்த வரலாறே கிடையாது - என்றார்.

# பாரதிய ஜனதா தலைவர்கள் பழனிசாமியை சந்தித்து பேச்சு



சென்னை, ஜூன் 24

அ.தி.மு.கவின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமியுடன் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, மேலிட பொறுப்பாளர் சி. டி. ரவி ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

சென்னை பசுமைச்சாலையில் உள்ள எடப்பாடியின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. அ. தி. மு. க. நிர்வாகிகள் தமிழ்மகன் உசேன், பொள்ளாச்சி ஜெயராமன், ஜெயக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

பா. ஜ. க. கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக திரௌபதி முர்மு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், டில்லியில் இன்று வெள்ளிக் கிழமை காலை வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளார்.

இந்நிலையில், பா. ஜ. க. வேட்பாளர் திரௌபதி முர்முவுக்கு அ. தி. மு.கவின் ஆதரவு கோரி எடப்பாடி பழனிசாமியை, பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை, மேலிடப் பொறுப்பாளர் சி. டி. ரவி ஆகியோர் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒற்றை தலைமை விவகாரம் ஜூலை 11 இல் தீர்வு நிச்சயம்!

சென்னை, ஜூன் 24

ஒற்றைத் தலைமை விவகாரத்துக்கு ஜூலை 11இல் நிச்சயம் தீர்வு காணப்படும் என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், வைத்திலிங்கம் பேசுகையில், "ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் இணைந்து கையெழுத்திட்டால்தான் அறிவிப்பு செல்லும். இது சட்டத்துக்குப் புறம்பாக நடைபெற்ற பொதுக்குழு கூட்டம். கட்சியை சதிகாரர்கள் அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கின்றனர்" என்றார்.

சென்னை வானகரத்தில் இன்று நடைபெற்ற அதிமுக பொதுக் குழுக் கூட்டம், ஒற்றைத் தலைமை என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதும், அந்த கோரிக்கை ஏற்கப்பட்டு, அடுத்த பொதுக் குழுக் கூட்டம் வரும் ஜூலை 11ஆம் திகதி நடைபெறும் என அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன் அறிவித்தார். (ஐ)

# பாம்புக் கடிக்கு மருந்தின்றி 20 பேர் பரிதாப உயிரிழப்பு

## அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 24

**பாம்பு விஷத்தை முறியடிப்பதற்கான தடுப்புகள் மருந்து இல்லாமையால் இதுவரையில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க தெரிவித்தார்.**

அடுத்த மூன்று வாரங்களுக்குள் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில மருந்துகளுக்குத் தற்போது பயன்படுத்தப்படும் மாற்று மருந்துகளும் அடுத்த 3 வாரங்களுக்குள் மருத்துவமனை களஞ்சியங்களில் இருந்து படிப்படியாக குறைவடையவுள்ளது என்றும் அவர் கூறினார்.

வைத்தியசாலை களஞ்சியங்களில் இருந்து 20 வீதமே மருந்துகள் வழங்கப்படுகின்றன என்றும், அவையும் எதிர்வரும் காலங்களில் நிறைவடையவுள்ளன என்றும் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க சுட்டிக்காட்டினார்.

தற்போது வைத்தியசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே மருந்துகள் வழங்கப்படுகின்றன என்றும், வயதான நோயாளிகளை விட இளம் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மதுபானப் பாவனை 30 வீதத்தால் குறைவு

கொழும்பு, ஜூன் 24

நாட்டில் மதுபானங்களின் பாவனை 30 வீதத்தினால் குறைந்துள்ளதாக கோபா எனப்படும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

அந்தக் குழு கூடியபோதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை எட்டுவதற்கு பல தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மதுபானத்தை உற்பத்தி செய்வதற்கான எத்தனோலின் அளவை வரையறுத்துள்ளமை, டீசல் மற்றும் உலை எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள இன்னல்களுமே இதற்கான காரணங்களாகும் என அந்த அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், மதுபானங்களின் விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார இன்னல்களே மதுபானப் பாவனை குறைந்துள்ளமைக்கான பிரதான காரணமாகும் என அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக சட்டவிரோத மதுபானத் தயாரிப்புக்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளதாகவும் அந்த குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு

## நான்கு பேர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, ஜூன் 24

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீகஹதென்ன மற்றும் நிக்கவெரட்டிய பகுதிகளில் உள்ள எரிபொருள் நிலையங்களில், பொலிஸாருக்கு குறித்த சந்தேகநபர்கள் இடையூறு விளைவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# அமரகீர்த்தி எம்.பி. கொலை; மேலும் ஒருவர் கைதானார்

கொழும்பு, ஜூன் 24

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் பிற்பகல் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கம்பஹா பிரதேசத்தை சேர்ந்த 32 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி, பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவின் கொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை 32 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# இலக்க தகட்டின்படி எரிபொருள் யோசனை தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 24

அத்தியாவசிய சேவைகளுக்குள் உள்ளடங்காத வாகனங்களின் இலக்க தகட்டின் இறுதி இலக்கங்களுக்கு அமைய வாரநாட்களில் எரிபொருளை விநியோகிக்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பிலான கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலக்க தகட்டில் 0, 1, 2 ஆகிய இறுதி இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கான எரிபொருள் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளிலும் 3, 4, 5, 6 இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வாகன இலக்க தகட்டில் 6, 7, 8, 9 ஆகிய இறுதி இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கான எரிபொருளை புதன், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழங்குமாறும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.எவ்வாறாயினும், இந்த நடை முறை ஆரம்பமாகும் தினம் தொடர்பில் இதுவரை எந்தவித அறிவிப்பும் வெளியாகவில்லை. (அ)

# ரஷ்யாவுடன் பேசுங்கள்!

## அரசுக்கு விமல் ஆலோசனை



கொழும்பு, ஜூன் 24

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றுக் கொள்வதில் மாத்திரம் தங்கியிருக்காமல் ரஷ்யா போன்ற எமக்கு உதவ முன்வரும் நாடுகளுடனும் பேச்சுக்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ரஷ்யா போன்ற நாடுகளுடனான பேச்சுவார்த்தைகளை ஒத்திப் போடாமல் அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் அந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டுமென தெரிவித்த அவர், இருநாட்டு ஜனாதிபதிகளுக்கு மிடையில் தொலைபேசி மூலம் உரையாடல்கள் நடத்தப்பட்டு எமது குழுவொன்று அங்கு அனுப்பப்படவேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு கட்டுப்பட்டு எமது பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண முற்படவேண்டாமென குறிப்பிட்ட அவர், ரஷ்யாவுடன் மேற்கொண்டுவரும் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சு வார்த்தையை எமது வர்த்தக திணைக்களம் ஒத்திப் போட்டுள்ளமையால் நாட்டுக்கான நன்மைகள் கிடைக்காமல் போகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அதனைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் உடனடியாக ரஷ்யாவுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் ரஷ்யா எமக்கு தொடர்ந்து உதவி செய்து வந்துள்ளது.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் நிவாரண அடிப்படையில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வது தொடர்பாக எம்மோடு இணைந்துள்ள கட்சித் தலைவர்கள் ரஷ்ய தூதுவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம்.

அந்த சந்திப்பின்போது ரஷ்ய தூதுவர், இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நீண்ட கால வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் தெரிவித்தார்.

அந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் என்றாலும் அந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் இலங்கையின் வணிக திணைக்களம் குறித்த ஒப்பந்தத்தை தற்போது மேற்கொள்ள முடியாது எனவும் வேறு ஒரு திகதிக்கு ஒத்திப் போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறு சம்பிரதாயமாக இடம்பெற்றுவரும் இலங்கை - ரஷ்ய வணிக ஒப்பந்தம் இடம்பெற்றிருந்தால், நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அதன் மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். ஆனால் அதற்கான சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ரஷ்யாவின் விமானம் ஒன்றை தடுத்து நிறுத்தியமை தொடர்பாக ரஷ்யாவுக்கு எமது நாடு மீதான மனத்தாங்கல் உள்ளது. குறித்த விவகாரத்திற்குப் பின்னர் ரஷ்யாவின் சுற்றுலாப் பயணிகளில் 50வீதமானவர்கள் வேறு நிறுவனத்துக்கு சொந்தமான விமானங்களிலேயே பயணிப் பதாக ரஷ்ய தூதுவர் எம்மிடம் தெரிவித்தார்.

அந்த விமான சேவையை தொடர்ந்தும் மேற்கொள்வதானால் இலங்கையிலிருந்து அது தொடர்பில் உறுதியான சான்றிதழ் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று ரஷ்யாவுடன் இடம்பெற்ற முரண்பாடான சம்பவம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி அந்த நாட்டு ஜனாதிபதியுடன் கலந்துரையாடி எமது நாட்டின் தேவைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

உயர்மட்ட தூதுக்குழு ஒன்றையும் அங்கு அனுப்புவதன் மூலமே உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ரஷ்ய தூதுவர் எம்மிடம் தெரிவித்தார்.

அத்துடன் ரஷ்யாவில் இருந்து எரிபொருள் பெற்றுக் கொள்வதில் அந்நாட்டு பாராளுமன்றத்தில் சில சட்டதிட்டங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டாலும் மனுதாபிமான உதவி என்ற அடிப்படையில் அது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் எம்மிடம் தெரிவித்தார்.

வேறு நாடுகள் ஒந்தங்களை செய்து உதவிகளை பெறும் போது நாம் ஏன் அதனை மேற்கொள்ளவில்லை என நான் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசிடம் கேட்ட போது, சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையா டலுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் பதிலளித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் கிடைக்கும் என எதிர்பார்த்திருப்பதன் மூலம் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடலுக்கு பாதிப்பு ஏற்படும் என கருதி, உதவி செய்யும் நாடுகளுடன் கலந்துரையாடாமல் இருந்தால் எப்படி பிரச்னைக்கு தீர்வுகாண முடியும்?-என்றார். (அ)

# எரிபொருள் நிலையங்களில் ஆசிரியர்களுக்கு அவமதிப்பு தொடர்ந்தால் சேவை புறக்கணிப்பு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 24**

**எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஆசிரியர்களுக்கு அவமதிப்பு தொடருமாயின் சேவையை புறக்கணிக்க நேரிடும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆசிரியர்களை மதிக்காத சமூகத்திற்கு ஏன் ஆசிரியர்கள் சேவை செய்ய வேண்டும்.

மதிப்பு கிடைக்கும் வரை சேவையை புறக்கணிக்க நேரிடும்.

தற்போது நாட்டில் உள்ள சூழ்நிலை எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் ஆசிரியர்களின் கடமையும் அவர்கள் ஆற்றும் பணியும் வித்தியாசமானது.

இந்த நிலையில் எரிபொருளுக்காக ஆசியர்களைக் காக்க வைப்பதும் அவர்களோடு அநாகரிகமாக நடந்து கொள்வதனையும் ஏற்க முடியாது.

சமூகத்தில் உள்ள குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் கல்வியூட்டி அவர்களைப் பெரியவர்களாக்கும் ஆசிரியர்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவமானப்படுத்துவமும் புறக்கணிப்பதும் அநாகரிகமானது. ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள்.

தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும். கைகூப்பி வணங்கவேண்டிய ஆசிரியர்களை கைகாட்டி வெருட்டும் அளவிற்கு வைக்காதீர்கள். அது ஒட்டு மொத்த சமூகத்திற்கும் கேடாகும்.

இத்தகைய நிலை தொடருமாக இருந்தால் ஆசிரிய பணியில் இருந்து ஒதுங்கவேண்டிய நிலை ஏற்படும். கிளிநொச்சியில் ஒரு ஆசி ரியை விட்ட கண்ணீர் ஒட்டு மொத்த ஆசிரியர்களும் விட்ட கண்ணீருக்குச் சமமானது-என்றுள்ளது. (அ)

## மண்ணெண்ணெய் விலை உயரலாம்?

கொழும்பு, ஜூன் 24

இந்த மாத இறுதிக்குள் மண்ணெண்ணெய் விலையை அதிகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாய்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இருப்பினும் அந்த விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 283 ரூபாய் வரையிலான நட்டத்தைச் சந்தித்து வருவதாக கூறப்படுகின்றது.

அவ்வாறு நட்டம் ஏற்படுவதைத் தடுப்பதாக இருந்தால் மண்ணெண்ணெய்யின் விலையை லீற்றருக்கு 370 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும் என கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அதே நேரம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக சலுகை விலையில் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## பெற்றோல் கப்பல் 1 நாள் தாமதமாகும்!

கொழும்பு, ஜூன் 24

நேற்று அதிகாலை நாட்டை வந்தடையவிருந்த 40,000 மெற்றிக் தொன் பெற்றோல் 92 தாங்கிய கப்பல் ஒருநாள் தாமதமாக வந்தடையவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றும் இன்றும் மட்டுப்படுத்தப்பட்டளவில் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் விநியோகிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் மேலும் கூறினார்.எவ்வாறாயினும் ஒட்டோ டீசல் இன்றும் நாளையும் முழுமையான கொள்ளளவில் விநியோகிக்கப் படவுள்ளதாக வும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ)

## வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணம்!

### தப்பி ஓடிய கார் பொலிஸாரால் மீட்பு

வவுனியா, ஜூன் 24

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா பறனட்டகல் கிராமத்தை சேர்ந்த 42 வயதுடையவர் தனது மைத்துனருடன் அறுவடை இயந்திரத்துக்கு எரிபொருள் பெறுவதற்காக அதனை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி சென்றுகொண்டிருந்தபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து பறன் நட்டகல் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவரை அதே திசையில் பயணித்த கார் மோதியதில் 42 வயதுடைய பாலகிருஸ்ணன் என்ற நபர் பலியானதுடன் மைத்துனர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் ஓமந்தை பொலிஸார் காரின் இலக்கத்தை அறிந்து அதனைக் கைப்பற்றி ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## காலி முகத்திடல் போராட்டக்காரர்களை கடுமையாக விமர்சித்த விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூன் 24

காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பத்தில் நியாயமான மக்கள் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது தற்போது பைத்தியகாரத்தனமான, போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் மோசடியாளர்களின் கூட்டாக மாறியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ சபையில் நேற்று முன்தினம் கடுமையாக சாடினார்.

நாட்டை அராஜக நிலைமைக்கு மாற்ற பைத்தியகாரர்கள் போன்று செயற்படும் போராட்டம் தொடர்பில் ஏன் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? எனவும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றிய அவர், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

இயற்கைப் பசளை பயிர்ச் செய்கை போன்ற சிறந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட காலிமுகத் திடல் போராட்டம் தற்போது இரசாயனப் பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்ட நிலைமை போல் மாறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு வந்திருந்தபோது, அவர்களின் நடவடிக்கைகளுக்கு காலிமுகத்திடல் போராட்டக் காரர்கள் தடையேற்படுத்தினர்.

நாடு ஸ்திரமற்ற நிலைமையில் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தி நாணய நிதியத் திடம் உதவி பெற்றுக்கொள்வதை தடுப்பதே போராட்டக் காரர்களின் நோக்கம்.போராட்டகாரர்கள் நாட்டை அராஜக நிலைமைக்கு மாற்ற பைத்திய காரர்கள் போன்று செயற்படும் போது ஏன் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கின்றீர்கள் என வினவினார். (அ)

## இலங்கைக்கு உதவி வழங்கவுள்ள குவாட்!

கொழும்பு, ஜூன் 24

குவாட் அமைப்பு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கான வாய்ப்புள்ளதாக அவுஸ்திரேலியாவின் பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சடர் மார்லெஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இந்த அமைப்பானது, தற்போது இலங்கைக்கு எவ்வாறு உதவுவது என்பது தொடர்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், அவுஸ்திரேலியா-இலங்கைக்கு இடையில் மிகப்பெரிய பொருளாதார ஒத்துழைப்புக்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## தாய்மையை கொச்சைப்படுத்த வேண்டாம் ஹிருணிக்காவுக்காக குரல் கொடுத்த ரணில்

கொழும்பு, ஜூன் 24

மூன்று பிள்ளைகளின் தாயான ஹிருணிகா பிரேமச்சந்திரவின் புகைப்படங்களை வெளியிடவேண்டாம் என சமூக ஊடக ஆர்வலர்கள் மற்றும் பாவனையாளர்களிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒழுக்கமான சமுதாயத்தில் தாய்மை அவமதிக்கப்படக் கூடாது என அவர் குறிப்பிட்டார்.

எல்லாவற்றிற்கும் முன் தாய்மை என்ற கருத்து மதிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர, பிரதமரின் தனிப்பட்ட இல்லத்துக்கு வெளியே நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட அவமானகரமான புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டதற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் விடயமாக ஹிருணிகா தனது இல்லத்துக்கு வந்ததாகவும் அவரது தாய்மையை அவமதிக்கும் வகையில் யாரும் நடந்து கொள்ளக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வரிசையில் காத்திருந்த மேலும் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூன் 24

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வரிசையில் காத்திருந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹொரண- அங்குருவ தொட்ட, படகொட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வரிசையில் காத்திருந்த 63 வயதுடை நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

டீசல் பெறுவதற்காக சுமார் ஏழு நாட்களாக குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசைகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க நடமாடும் விற்பனை ஆரம்பம்

வவுனியா, ஜூன். 24

வவுனியாவில் விவசாயத் திணைக்களத்தின் விதைகள் நடுகைப் பிரிவினரால் நடமாடும் விற்பனை சேவை ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு பொதுமக்களை வீட்டுத்தோட்டம் செய்ய ஊக்குவிக்கும் நோக்கோடு மரக்கறி பயிர் விதைகள் அடங்கிய பொதிகள் மற்றும் நாற்றுக்கள் கொண்ட நடமாடும் விற்பனை சேவை ஒன்று வவுனியா விவசாய திணைக்களத்தின் விதைகள் நடுகை பிரிவினரால் வவுனியா நகரில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சேவையில் வீட்டுத்தோட்டத்துக்கு தேவையான மரக்கறி விதைகள், நாற்றுக்கள் மற்றும் மேட்டு நில பயிர்களான பயறு, கௌபி, குரக்கன் போன்ற விதைகள், பழப்பயிர்கள், நாற்றுக்கள் என்பன விற்பனை செய்யப்பட்டன. (அ)

# பிரதேச செயலாளர்களின் திடீர் அறிவிப்பால் குழப்பம்

## அறிவித்தல்களும் கிழித்தெறியப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன். 24

கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் பல மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருந்தவேளை, நல்லூர் பிரதேச செயலர், தமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கவேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்கு பணித்திருந்தார். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.




நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையிலும், நேற்று கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

அதேவேளை, கோப்பாய் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்த வேளை, அத்தியாவசிய சேவைப் பணியாளர்களுக்குத் தான் எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டப்பட்டமையால் குழப்பம் ஏற்பட்டு அறிவித்தல்களை மக்கள் கிழித்தெறிந்தனர்.

அதேவேளை, நேற்று முன்தினமே வேலணை மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகங்களால் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அறிவிக்கப்பட்டமையால், அவ்விரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் குழப்பங்கள் இன்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. (அ)

# மக்களின் ஆர்ப்பாட்டங்களை புத்துயிர் பெறச் செய்ய தயார்

## அநுரகுமார திஸாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 24

அரசாங்கத்தை பதவி விலகச் செய்வதற்கான மக்களின் ஆர்ப்பாட்டங்களை புத்துயிர் பெறச் செய்வதற்கு தயாராகவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்த அமைச்சரவைக்கு தொடர்ந்தும் நாட்டை நிர்வகிக்கும் உரிமை கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களைப் பற்றி எவ்வித கவலையும் அற்ற அரசாங்கமே தற்போது நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் மீண்டும் அவர்களின் அரசியல் விளையாட்டுக்களை ஆரம்பித்துள்ளனர்.

எனவே மக்களின் ஆர்ப்பாட்டங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து, அவர்களுடன் இணைந்து போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இதற்கமைய எதிர்வரும் 26ஆம் திகதி அநுராதபுரத்திலும், 27ஆம் திகதி குருணாகலிலும், 28ஆம் திகதி மாத்தறையிலும், 29ஆம் திகதி களுத்துறையிலும் ஜூலை முதலாம் திகதி அம்பலாந்தோட்டையிலும் தொடர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இதே போன்று ஏனைய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# காரைநகர் எரிபொருள் நிலையத்தில் குழப்பம்!

## பிரதேச சபைக்கு சொந்தமான வாகனம் சேதமாக்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஜூன். 24

காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து பிரதேச சபைக்கு சொந்தமான வாகனம் ஒன்று உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று பொதுமக்களுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் என பிரதேச செயலர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனமொன்றில் எரிபொருள் நிரப்புவதற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அவ்விடத்துக்கு சென்று எரிபொருள் நிரப்பியமையினால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு எரிபொருள் நிரப்ப முயன்ற பிரதேச சபைக்குச் சொந்தமான கன்ரர் ரக வாகனம் மக்களினால் உடைத்து சேதமாக்கப்பட்டது. (அ-03)

# கொழும்பு கறுப்பு சந்தைக்கு ஹற்றனில் இருந்து எரிவாயு!

கொழும்பு, ஜூன். 24

கொழும்பில் கறுப்பு சந்தைக்கு அனுப்புவதற்காக ஹற்றனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை சமையல் எரிவாயுவை பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் இணைந்து நேற்று மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸாரும், நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளும் அறிவித்துள்ளனர்.

ஹற்றன் பஸ் தரப்பிடத்துக்கு பின்பகுதியில் உள்ள 'கொரியர்' சேவை வழங்கும் நிலையமொன்றிலிருந்தே இவ்வாறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

2.5 கிலோ எடையுடைய 8 லாப் காஸ் சிலிண்டர்களும், 12.5 கிலோ எடையுடைய 12 லாப் காஸ் சிலிண்டர்களும் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

"கொழும்புக்கு கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கும் வியாபாரம் இடம்பெற்று வந்துள்ளது. இது தற்போது அம்பலமாகியுள்ளது" என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கொரியர் சேவை வழங்கும் நிறுவனத்துக்கு நேற்று முன் தினம் வெற்று சிலிண்டர்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்நிலையில் நேற்று எரிவாயு நிரப்பட்ட சிலிண்டர்கள் அங்கு மிகவும் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் ஹற்றன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் சம்பவ இடத்துக்கு வந்து, தேடுதல் வேட்டை நடத்தினர். இதன்போது சிலிண்டர்கள் இருப்பது தெரிய வந்துள்ளது.

தமது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வழங்கவே எரிவாயு வைக்கப்பட்டிருந்தது என நிறுவனத்தின் பொறுப்பாளர் கூறியுள்ளார்.

எனினும், அவரின் கூற்று பொய்யென தெரிய வந்ததையடுத்து, பொலிஸார் சிலிண்டர்களை கொண்டு சென்றனர். குறித்த நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

"எமக்கு கூப்பன் வழங்கப்பட்டாலும் எரிவாயு வழங்கப்படுவதில்லை. இன்னமும் வரிசையில் காத்திருக்கின்றோம். ஆனால் இவர்களுக்கு எப்படி எரிவாயு கிடைக்கின்றது. கறுப்பு சந்தை வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்படவேண்டும்." என மக்கள் வலியுறுத்தினர். (அ)

# பாலிநகர் மதுபான நிலைய உரிமையாளர் தங்குமிடத்திலிருந்து நேற்று சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஜூன். 24

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பாலிநகர் பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலைய உரிமையாளர் நேற்றுக் காலை மதுபான நிலையத்துக்கு அருகில் உள்ள தங்குமிடத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் கொழும்பு, வத்தளைப் பகுதியை சேர்ந்த 40 வயதான சுப்பிரமணியம் கிருபாகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)




# ஆப்கானிய அகதிப் பெண்:

# உலக அகதிகள் தினத்தில் ஆஸி நாடாளுமன்றில் செனட்டரானார்!

—— ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆப்கானிய அகதிப் பெண்ணான பாத்திமா பேமன் அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் முதல் ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண் செனட்டராக பதவியேற்றார். கடந்த திங்கள் (20.6.22) உலக அகதிகள் தினத்தன்று, தொழிலாளர் கட்சி வேட்பாளரும் முன்னாள் அகதியுமான பாத்திமா பேமன் (Fatima Payman) இறுதித் தேர்தல் முடிவுகளின்படி மீதமுள்ள மேற்கு ஆஸி செனட் இடத்தைப் வென்றுள்ளார்.

இன்றைய நாளில் வரலாறு படைக்கிறேன் எனக் கூறிய ஆப்கானிஸ்தானின் முன்னாள் அகதியான திருமதி பேமனின் வெற்றி உலக அகதிகள் தினத்தன்று வந்ததால் பலரது கவனத்தையும் ஈற்றார்.

லிபரல் செனட்டர்களான மைக்கேலியா கேஷ் மற்றும் டீன் ஸ்மித் ஆகியோருடன் தொழிற்கட்சி செனட்டர்களான சூ லைன்ஸ் மற்றும் க்ளென் ஸ்டெர்லே ஆகியோர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவர் மாநிலத்தின் ஒரே புதிய செனட்டர் ஆக பதவியேற்றார்.

மேற்கு அவுஸ்திரலியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் முதல் அகதிப் பெண் பேமன் திங்களன்று வெற்றி பெற்ற பிறகு மகிழ்ச் சியுடன் கூறுகையில் "நாங் கள் வென்றோம், நான் அதிகாரப்பூர்வமாக மேற்கு ஆஸ்திரேலியாவுக்கான செனட்டராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன், உங்கள் அன்பிற்கும் ஆதரவிற்கும் அனைவருக்கும் நன்றி! நீங்கள் கேட்டதை நாங்கள் அதை செய்தோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



அவுஸ்திரேலிய பிரதம மந்திரி அந்தோனி அல் பானீஸ் ட்விட்டரில் தனது வாழ்த்துக்களை புதிய செனட்டர் பேமேனுக்கு தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆஸ்திரேலியாவின் ஆறாவதும் இறுதியுமான செனட் ஆசனத்தில் பாத்திமா பேமன் வெற்றி பெற்று, முதல் ஆப்கானிஸ்தான் அகதிப் பெண் ஆஸி நாடாளுமன்றத்தில் ஹிஜாப் அணிந்த முதல் முஸ்லீம் பெண்மணியாக பதவியேற்றார்.

மேற்கு ஆஸி பெர்த்தின் வடக்கு புறநகர்ப் பகுதிகளில் வளர்ந்த பாத்திமா பேமன் தனது பெற்றோர் மற்றும் மூன்று உடன்பிறப்புகளுடன் குழந்தையாக ஆப்கானிஸ்தானில் இருந்து அகதியாக வந்தடைந்தார்.

அவரது ஆரம்ப காலத்தில், தந்தை சமையலறையில் வேலை செய்பவராகவும், பாதுகாவலராகவும், டாக்ஸி டிரைவராகவும் 24 மணி நேரமும் வேலை செய்தார். அவரது தாயார் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் தனது சொந்த சிறு தொழிலை தொடங்கி குடும்பத்தைக் கவனித்து வந்தார்.

இவர் இளமையாக இருந்தபோது பெற்றோரின் கடின உழைப்பால் ஈர்க்கப்பட்டு, பாத்திமா பேமன் ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் அமைப்பாளராக ஆனார், மேலும் 2018 இல் தனது தந்தையை இரத்தப் புற்றுநோயால் இழந்த பிறகு, அவரைப் போன்ற கடின உழைப்பாளி ஆஸ்திரேலியர்களை பிரதிநிதித்துவப்படுத்த முடிவு செய்தார்.

பாத்திமா பேமன் பெண்கள், இளைஞர்கள் மற்றும் கலாச்சார ரீதியாக வேறுபட்ட சமூகங்களுக்கான தடைகளை உடைப்பதில் ஆர்வமாக உள்ளார். சக தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் உரிமை ஆர்வலர்கள் திங்களன்று பாத்திமா பேமனை வாழ்த்தினார்கள்.

"பாத்திமா பேமன் பெண்கள், இளைஞர்கள் மற்றும் கலாச்சார ரீதியாக வேறுபட்ட சமூகங்களுக்கான தடைகளை உடைப்பதில் ஆர்வமாக உள்ளார். சக தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் உரிமை ஆர்வலர்கள் திங்களன்று பாத்திமா பேமனை வாழ்த்தினார்கள்.

"கான்பெராவில் எங்களை பிரதிநிதித்துவப்படுத்த எங்கள் மாநிலம் பாத்திமாவை அனுப்புவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று மேற்கு ஆஸி பாராளுமன்ற உறுப்பினர் பட்றிக் கூறியுள்ளார்.

செனட்டராக தேர்ந்தெடுக்கப்பட்ட பேமேன் ஆப்கானிஸ்தானில் இருந்து கலாச்சார வேர்களைக் கொண்ட ஒரு ஆஸ்திரேலிய முஸ்லீமை ஆஸ்திரேலியாவில் உள்ள ஆப்கானிஸ்தான் தூதரகம், குறிப்பாக உலக அகதிகள் தினத்தன்று இந்தச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறியுள்ளது.

# பிரான்ஸ் இசைத்திருவிழா 40 ஆண்டுகள் நிறைவு!

—— என்.கே.துரைசிங்கம்

கலைகளின் தாயகம் கலாச்சார மையம் என்று வர்ணிக்கப்படும் பிரான்ஸ் தேசத்தில் இசைக்கு முக்கியத்துவம் அளிக்கும் இசைத்திருவிழா ஆனி 21 நாடெங்கும் கோலகலமாக கொண்டாடப்பட்டது. மாலை 6மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரையும் இசை நிகழ்வுகள் நடைபெற்றன.

குட்டி யாழ்ப்பாணம் பாரிஸ் லா ச்சப்பல் மற்றும் புற நகரங்களில் தமிழ் இசை நிகழ்வுகளில் சினிமா மற்றும் தாயக பாடல்கள் ஒலித்தன. அதிகமான மக்கள் கூடியிருந்து இசையை ரசித்தனர். கொரோனா காலங்களில் அடக்கி வாசிக்கப்பட்ட இந்நிகழ்வுகள் தற்பொழுது பிரமாண்டமாக நடைபெற்று வருகின்றன .

இசைக்கு மொழி ஒரு பிரைச்சினை இல்லை. மொழி பேதமின்றி எல்லோரும் ஒன்றுசேர்ந்து இசையை ரசித்தனர். மெட்ரோ பயணத்திலும் சாலையோரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும் பிரான்ஸிலுள்ள பல இசையாளர் இசைக்கருவிகளை வாசித்து மக்களை மகிழ்விப்பார்கள். இறுதியில் இசையாளர்களுக்கு பார்வையாளர்கள் பணம் வழங்குவார்கள். தமது வாழ்வாதாரத்திற்காக இவ்வாறான நிகழ்வுகள் நிகழ்த்துவார்கள். இங்கு இசைக்கப்படும் இசை ராகங்களை கொண்டே வேறு இசைகளை உருவாக்கமுடியும் என்ற அளவுக்கு அந்த ராகங்கள் இசைக்கோர்வைகள் அமைந்திருக்கும்.

பிரான்ஸ் மக்கள் பேசுகின்ற மொழி, அவர்களது செயற்பாடுகள் எல்லாமே இசையோடு கலந்து போயிருக்கும். காலை, நண்பகல், பிற்பகல், இரவு என எந்த வேளையில் அவர்கள் உச்சரிக்கின்ற வணக்கம் கூட இசையுடன் உச்சரிக்கப்படும் இசையோடு இரண்டறக் கலந்தவர்கள் இங்குள்ள மக்கள். அதனால் தான் இசைத்திருவிழாவும் இங்கு தோற்றம் பெற்றிருக்கலாம் என உணர்கிறேன்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# இலங்கை பொருளாதார நெருக்கடி:

## ரணிலுக்கு எதிராக திரும்பிய போராட்டம்

## காரணம் என்ன?

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்ற நிலையில், போராட்டங்களும் நாளுக்கு நாள் வேறுபட்ட விதத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பு - காலி முகத்திடலில் கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தன்னெழுச்சி போராட்டம் நேற்று முன்தினத்தோடு 75 வது நாளை எட்டியது.

சுமார் ஒரு மாத காலம் போராட்டம் வலுப் பெற்ற நிலையில், மே மாதம் 9 ஆம் திகதி போராட்டம் வன்முறையாக மாற்றம் பெற்றது.

அலரிமாளிகையில் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் காலி முகத்திடலை நோக்கி வருகைத் தந்து, அரசாங்கத்திற்கு எதிராக தன்னெழுச்சி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இந்த தாக்குதலை அடுத்து, காலி முகத்திடலில் மாத்திரமன்றி, நாடு முழுவதும் வன்முறை ஏற்பட்டது.

இந்த நிலையில், அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய பெரும்பாலானோரின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதுடன், 10ற்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தனர். அத்துடன், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தொடர்ந்த போராட்டம் மீண்டும் வலுவிழக்க ஆரம்பித்திருந்தது. எவ்வாறாயினும், காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து நடத்தப்படும் போராட்டம் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், கடந்த 20ம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது 73 வது பிறந்தநாளை கொண்டாடியிருந்தார்.

இதையடுத்து, ஜனாதிபதி செயலகத்தின் அனைத்து நுழைவாயில்களையும் மறித்த போராட்டக்காரர்கள், நுழைவாயில்களுக்கு முன்பாக கூடாரங்களை அமைத்து பேராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் அன்று காலை வருகைத் தந்த பொலிஸார், அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை அப்புறப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போது, போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன்போது, பொலிஸாரினால் 21 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து, பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம், அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதாக போராட்டக்காரர்கள் கடந்த 20ம் திகதி அறிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நேற்றுமுன் தினம் கொழும்பில் பெண்கள் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தலைமையில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் நடத்தப்பட்டது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் கொழும்பிலுள்ள பிரத்யேக வீட்டு வளாகத்தில் ஒன்று கூடிய பெண்கள், ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து, மகஜரொன்றை கையளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும், இந்த பெண்களின் கோரிக்கைக்கு, பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. இதையடுத்து, அந்த பகுதியில் அமைதியின்மை நிலவியது.



பொலிஸாரினால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகளுக்கு மேல் ஏறி, பிர தமரின் வீட்டு வளாகத்திற்குள் செல்ல ஹிருணிகா பிரேமசந்திர தலைமையிலான பெண்கள் முயற்சித்திருந்தனர். எனினும், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களின் கோரிக்கை இறுதி வரை நிறைவேற்றப்படவில்லை. இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



இந்த போராட்டத்தில் கலந்துக் கொண்டிருந்த சுமதி, "10 நாட்களாக நாங்கள் மண்ணெண்ணை வரிசையில் காத்திருக்கின்றோம். பெண் பிள்ளைகளை வைத்துக்கொண்டே காத்திருக்கின்றோம். 17, 18 வயது பிள்ளைகள் எங்களுக்கு. அவர்களையும் நாங்கள் வீதிக்கு இறக்கியுள்ளோம். பள்ளிகூடம் போக முடியாது. காலையில சாப்பிட சாப்பாடு இல்ல. நான் புட்டு அவித்து விற்று தான் பிள்ளைகளை வளர்க்கின்றேன். எனக்கு அதையும் செய்ய முடியவில்லை. கேஸ் இல்லை. இரவு இரவாக வரிசையில் என்னோட கணவர் காத்திருக்கின்றார். உதவி செய்ய யாரும் இல்ல. அரசாங்கத்திடம் நாங்கள் ஒன்றும் கேட்கவில்லை.



கேஸ், மண்ணெண்ணை மாத்திரம் தந்தால் மட்டும் போதும், நாங்கள் உழைத்து வாழ்கின்றோம்." என சுமதி கண்ணீருடன் கருத்து தெரிவித்தார்.

பிரதமர் ரணில் ராஜபக்ஷ குடும்பத்தை காப்பாற்ற நினைப்பதாகவும் எனவே அவர் பதவி விலக வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் தெரிவித்தார்.

"அரிசி தட்டுப்பாடு நிலவுகின்றது. நாளுக்கு நாள் இந்த கள்ள சந்தையிலே வெவ்வேறு விலைகள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். பால்மா இல்லை. கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், பெண்களுக்கான உணவுகள் இல்லை.

ஒவ்வொரு நாளும் குடும்பத்தில் இருக்கக்கூடியவர்கள் வரிசையில் இருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதனால், அழுத்தங்கள் ஏற்பட்டு, மரணங்கள் கூட ஏற்படுகின்றன. பிரதமர், ஒவ்வொரு நாளும் ஜோதிடரை போல தகவல் சொல்கின்றார். இன்னும் இரண்டு வாரங்கள் பொருத்துக் கொள் ளுங்கள், கேஸ் கப்பல் வந்திருக்கின்றது. எரிபொருள் கப்பல் வந்திருக்கின்றது என்று.

யார் என்றாலும், மக்களுக்கு நிலையாக ஆட்சியை கொடுக்க வேண்டும். இவ்வளவு வரிசையில் மக்கள் மன அழுத்தத்துடன் இருக்கும்போது, பெண்கள் நாங்கள் ஒரு விண்ணப்பத்தை கொடுக்க வந்திருக்கின்றோம். இதற்கு பொதுபோக்குவரத்தை நிறுத்தி, இவ்வளவு பாதுகாப்பை கொடுத்து, கண்ணீர் புகை வாகனங்களை கொண்டு வந்து குவித்திருக்கின்றார்கள்.

சமையலறையில் இருக்கின்ற பிரச்னைகளை சொல்வதற்கு தான் நாங்கள் வந்திருக்கின்றோம். முக்கியமாக பிரதமர் பதவி விலக வேண்டும். ராஜபக்ஷவை காப்பாற்றுவதை நிறுத்த வேண்டும்" என உமாசந்திரா பிரகாஷ் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார் பிரதமர் ரணில் விக்ரமசிங்க. அப்போது, எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு அப்பால் மிக மோசமான நிலைமையை தற்போது தாம் எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கை இந்த இக்கட்டான சூழலி லிருந்து எப்படி மீள்வது என்பதற்கான சில யோசனைகளையும் அவர் முன் வைத்தார்.

"இலங்கையின் புதிய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் உருவாக்கவும் நாம் எமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். முன்னோக்கி செல்லும் பாதைக்கான அடித்தளத்தை உருவாக்க, ஆகஸ்ட் மாதம் 2022இல் மீதமுள்ள காலத்திற்கு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்போம். 2023ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத்திட்டம் வரும் நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்படும். இது தவிர, நமது பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான பல புதிய சட் டங்களை நாடாளுமன்றத்தில் முன்வைப் போம். நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் சகல கட்சிகளுடனும் இவை தொடர்பில் நாம் ஏற்கனவே கலந்துரை யாடலை ஆரம்பித்துள்ளோம்" எனவும் பிரதமர் தெரிவித்தார்.

(பிபிசி)

# பிரான்ஸ் இசைத்திருவிழா ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரான்ஸ் ஜனாதிபதி மாளிகை எலிசே மாளிகை யில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பங்கு பற்றிய இசை நிகழ்வு நடைபெற்றது.

1982 ஆனி 21 முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இசைத்திருவிழா இந்த வருடம் 40 ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

அமெரிக்கா, ஐரோப்பிய மற்றும் பல மொழி பாடல்கள் இங்கு பாடப்பட்டன. பிரான்ஸில் தொடங்கப்பட்ட இசைத்திருவிழா ஜெர்மனியில்1985 ஆரம்பிக்கப்பட்டு இன்று 110 நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

தாயகத்தில் போர் உக்கிரமடைந்த நிலையில் அங்கு உயிர் வாழமுடியாது ஏதிலிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்த நம்மவர்களில் பலர் பிரான்ஸில் வதிவிட அனுமதி கோரினர். இவ்வாறு புகலிடம் பெற்றவர்களில் தமது ஆற்றல்களை துணையாக கொண்டு வாழத்தொடங்கினர். இசைத்துறையில் ஆற்றல் படைத்தவர்கள் அதனை வைத்தே முன்னேறத்தொடங்கினர். ஈழத்தமிழர்கள் மத்தியில் மட்டும் பல இசைக்குழுக்கள் பாரிஸில் இயங்குகின்றன. விழாக்களில் இசை வெள்ளத்தில் தமிழர்களை மிதக்க வைக்கிறார்கள்.



இசைக்கச்சேரிகள், குறும்படம், சினிமா, பாடல் அல்பம் வெளியிடுவதென தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தி வருகிறார்கள் .இயல்பாக இசைத்திறன் கொண்ட ஈழத்தமிழர்களுக்கு பிரான்ஸ் இசைத்திருவிழாவும் ஒரு வரப்பிரசாதமாகும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1) 
2) 
3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**24.06.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**24.06.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அமிர்தலிங்கம், அஷ்ரப், தொண்டமான் மூவருமே தமிழரின் தேசிய தலைவர்கள்

## அம்பாறையில் தெரிவித்தார் அமைச்சர் டக்ளஸ்

அம்பாறை, ஜூன். 24

**தமிழ் பேசும் மக்களின் தேசிய தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்.இரண்டாவது எம்.எச்.எம்.அஷ்ரப். மூன்றாவது சௌமியமூர்த்தி தொண்டமான். இம்மூவரையும் தான் நான் தமிழ் பேசும் மக்களின் தேசிய தலைவராக கருதுகின்றேன் என கடற்றொழில் வள அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**



அம்பாறை மாவட்டம் ஒலுவில் துறைமுகத்தை அபி விருத்தி செய்து மக்கள் பாவ னைக்கு உட்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த நேற்று முன்தினம் புதன் கிழமை கடற்றொழில் வள அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா அங்கு விஜயம் மேற்கொண்டார். இதன் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

மக்கள் சேவை கொண்ட தாகவே எனது கடமை இருக் குமே தவிர எவ்வித சுயலாப மும் இருக்காது.ஆகவே பலரும் பலதை கதைக்கலாம்.எனக்கு அதை பற்றி அக்கறை இல்லை.இவர்களுக்கு ஒரு தேசிய தலைவர் ஒருவர் இருந்தவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். வடக்கு-கிழக்கு உட்பட மலையகத்திலும் 3 தேசிய தலைவர்கள் இருந்தனர்.இது நான் சொல்கின்ற தேசிய தலைவர்கள்.வேறு நபர்கள் வேற விதமாக கூறலாம்.தே என்ற சொல்லுக்கு ஒற்றைக் கொம்பை மாற்றி (தெ) என்ற தலைவர் வேறு என்பதாகும்.

ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மக்கள் பாவனைக்கு உட்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மக்களின் வாழ்வா தாரத்தை வளப்படுத்தி கட்டியெழுப்புவதற்கு பல வேலைத்திட்டங்கள் உள்ளன. இந்த மாவட்டத்தின் மக்களுக்கு தான் முன்னுரிமை வழங்கப்படும்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வைக்கோல் பட்டறை நாய் மாதிரி.அதாவது தாங்களும் செய்ய மாட்டார் கள். செய்பவர்களையும் விடமாட்டார்கள்- என்றார்.

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடு களை சம்பிரதாயபூர்வமாக மீள ஆரம்பிப்பதற்கும் குறித்த துறைமுகத்துக்கு மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் பெயரினை வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே இவ்விடயத்தில் வீணான அரசியல் செய்யாமல் அனைத்து தரப்பினரும் முன்வந்து ஒத்துழைப்புகளை வழங்கவேண்டு என அவர் கேட்டுக்கொண்டார்.

இதன் போது துறைசார் அதிகாரிகள் மீனவ சமூ கத்தை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)

# மருதமுனை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி பணிகள் குறித்து ஆராய்வு



அம்பாறை, ஜூன். 24

மருதமுனை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்தியதிகாரி மருத்துவர் ஏ. எல்.எம். மிஹ்லார் தலைமையிலான வைத் தியசாலை அபிவிருத்தி குழுவினருக்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குமிடையிலான வைத்திய சாலை அபிவிருத்தி தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன் கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கொரோனா தொற்றினால் பாதிக்கப் பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு சிகிச்சை வழங்கும் நோக்கில் கடந்த காலங் களில் அம்பாறை மாவட்டத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சிகிச்சை நிலை யமாக வெற்றிகரமாக தொழிற்பட்டு நாட் டின் பல்வேறு இடங்களிலிருந்தும் பல நூற் றுக்கணக்கானோருக்கு சிகிச்சையளித்த இந்த வைத்தியசாலையின் பல்வேறு அபிவிருத் தித் திட்டங்கள், வளத் தேவைகள், வைத் தியசாலை மேம்பாட்டு வேலைத்திட் டங்கள், இருக்கும் வளங்களை பயன்படுத்தி மக்களுக்கு உயர்ந்த சுகாதார சேவைகள் வழங் குவது தொடர்பில் கல் முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்து வர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் விரிவாக இங்கு ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எம்.பி.அப் துல் வாஜித், கல்முனை பிராந்திய திட்ட மிடல் வைத்திய அதிகாரி மருத்துவர் எம். சி.எம். மாஹீர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உபதலைவர்க ளான இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பொறி யியல் பீட பீடாதிபதி கலாநிதி எஸ்.எம். ஜூ னைதீன், உள்ளூராட்சி மன் றங்களின் செயற்திட்ட அதிகாரி எம். ஐ.எம். வலீத், செயலாளர் எம்.பி. அறபாத், பொருளாளர் தொழிலதிபர் எம்.எச். எம். தாஜுதீன், வைத்தியசாலை அபி விருத்தி குழுவின் நிர்வாக உறுப் பினர்களான எம்.பி முஹம்மட் ஷா, எம். நிஹ்ம துல்லா உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டக்களப்பில் பெற்றோல்

மட்டக்களப்பு, ஜூன். 24

மட்டக்களப்பு மாவட் டத்தில் எவ்வித தங்குதடை யுமின்றி அரச உத்தியோகத் தர்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதி பர் கே.கருணாகரனின் வழி காட்டலில், பிரதேச செய லக ரீதியாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிரதேச செயலாளர்களி னால் அட்டைகள் வழங்கப் பட்டு, குறித்த அட்டைகளுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

ஆரையம்பதி பிரதேசத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பலவேறு அரச திணைக் களங்களிலும் கடமை புரி யும் உத்தியோகத்தர்கள் மிக நீண்ட வரிசைகளில் நின்று பெற்றோலைப் பெற்றுக்கொண்டனர். (அ)



# மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு மட்டும் கிழமையில் ஒருநாள் தனியாக எரிபொருள்

அம்பாறை, ஜூன். 24

சாய்ந்தமருதிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு மட்டும் கிழமையில் ஒருநாள் தனியாக எரிபொருள் வழங்க நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச செயலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏனைய நாட்களில் வழமை போன்று சகலருக்கும் எரிபொருள் வழங்கப்பட வுள்ளது.

பிரதேச செயலாளர், ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகிகள், பொலிஸார், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர் கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் பல எரி பொருள் நிரப்பு நிலையங்கள் இருந்தும் மக்களுக்கு எரிபொருள் முறையாக கிடைப்பதில்லை என பிரதேச செயலா ளருக்கு பொதுமக்கள் வழங்கிய முறைப் பாட்டை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேச மக்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் தினங்களை பள்ளிவாசல்கள் ஊடாக அறி விக்க நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.ஹிபத்துல்கரீம், செயலாளர் எம்.எம்.மன்சூர், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி சனூஸ் காரியப்பர், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். எம்.சம்சுதீன், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், கிராம நிர்வாக உத்தி யோகத்தர் எம்.எஸ்.எம். நளீர் உள்ளிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், சிவில் சமூக செயற் பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# இளைஞனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜூன். 24

மட்டக்களப்பு காத்தான் குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி 3 குதா வீதி யிலுள்ள வீடொன்றில் இளை ஞர் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

23 வயதுடைய பதுர்தீன் சுபைக் அகமட் எனும் இளைஞனே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

குறித்த இளைஞன் நேற்று முன் தினம் இரவு தூக்கத் துக்கு சென்றவர் நேற்றுக் காலை தூக்கத்திலிருந்து எழும்பாத நிலையில் மரணமடைந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

உறவினர்கள் காத்தான்குடி பொலி ஸாருக்கு அறிவித்ததையடுத்து, காத் தான்குடி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி கதுமிந்த நயனசிறியின் வழி காட்டலில், காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ரஹீம் தலைமையில் சென்ற பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணை களை மேற்கொண்டனர். (அ)

### பிரான்ஸில் மீண்டும் மாஸ்க்?

# ஒமெக்ரோனின் உப திரிபு அலையாகப் பரவுகின்றது

பரிஸ், ஜூன். 24

பிரான்ஸில் பொதுப் போக்குவரத்துகளில் மீண்டும் மாஸ்க் அணியும் கட்டாய விதி குறித்துப் பரிசீலிப்பது நல்லது என்று தடுப்பூசி நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார்.

புதிய வைரஸ் திரிபுகள் கோடை வெப்ப காலப் பகுதியிலும் வேகமாகப் பரவ ஆரம்பித்திருப்பதை அடுத்தே இவ்வாறு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நலிவான வயோதிபர்கள், நோய்களால் பலவீனமானவர்கள் ஆகிய தரப்பினரைப் பாதுகாப்பதற்காக சமூகத்தின் ஏனைய தரப்பினர் மாஸ்க் அணிந்து கொள்வது நல்லதே என்று நாட்டின் தடுப்பூசி உத்தி தொடர்பான கண்காணிப்புக் கவுன்ஸிலின் தலைவர் அலைன் பிஷ்ஷர் செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் பொதுப் போக்குவரத்துகள் உட்பட சகல பொது இடங்களிலும் மாஸ்க் அணியவேண்டும் என்ற சுகாதார விதிகள் கடந்த மே மாதம் 16 ஆம் திகதி முற்றாக நீக்கப்பட்டன.

ஐரோப்பாவில் ஒமெக்ரோன் திரிபின்இரண்டு புதிய உப திரிபுகள் வரும் கோடை விடுமுறைக் காலத்தில் புதிதாகத் தொற்றலைகளை ஏற்படுத்தலாம் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

டெல்ரா வைரஸ் திரிபைப் போன்று தற்சமயம் ஒமெக்ரோன் திரிபுகள் உலகெங்கும் ஆதிக்கம் செலுத்தும் தொற்றுக் கிரிமிகளாக மாறியுள்ளன.

பிரான்ஸ், ஜேர்மனி, போர்த்துக்கல், டென்மார்க் போன்ற நாடுகளில் பிஏ4, பிஏ5 ஆகிய இரண்டு ஒமெக்ரோன் திரிபுகள்வேகமாகப்பரவத்தொடங்கியுள்ளன. பிரான்ஸில் கடந்த சில வாரங்களில் தொற்றாளர் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்திருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது. ஜூன் 12 முதல் 18 வரை நாளாந்தத் தொற்று எண்ணிக்கை சராசரியாக 50 ஆயிரமாக அதிகரித்துள்ளது.சுகாதாரப் பகுதியினர் இதனை ஒரு தொற்றலையாக இன்னமும் அறிவிக்கவில்லை. ஆயினும் வரும் குளிர் காலத் தொடக்கத்தில் நாடு ஏழாவது தொற்றலையைச் சந்திக்க நேரிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்சமயம் பரவுகின்ற பிஏ4, பிஏ5 திரிபுகள், தடுப்பூசிகள் மூலமும் முந்திய தொற்று மூலமும் உடலில் உருவாகிய எதிர்ப்புச்சக்தியை மீறிச் சகலரையும் பீடிக்கின்ற தன்மை வாய்ந்தவை என்பதைத் தொற்றுநோய் நிபுணர்கள் குறிப்பிட்டு எச்சரித்து வருகின்றனர்.


இந்த இரு திரிபுகளில் இருந்தும் முழுப் பாதுகாப்புப் பெற்றவர்கள் என்று எவருமே கிடையாது என்பதை அவர்கள் நினைவூட்டியுள்ளனர். (அ)

# பொருளாதார தடைகள் பூமராங் போன்றவை!

### அமெரிக்காவுக்கு சீனா கண்டனம்

**பீஜிங், ஜூன். 24**

**உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளுக்கு சீனா ஜனாதிபதி ஸி ஜின் பிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



சீனா, ரஷ்யா, பிரேஸில் மற்றும் இந்தியா, உள்ளிட்ட நாடுகளை உறுப்பினர்களாக கொண்டுள்ள பிரிக்ஸ் அமைப்பின் வர்த்தக மன்றக் கூட்டத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சீனாவில் காணொளி முறையில் நடைபெற்ற இந்த கூட்டத்தின்போது, அவர் உரையாற்றுகையில், பொருளாதார தடைகள் பூமராங் போன்றவை. இருபுறமும் கூர்மையான வாளுக்கு ஒப்பானவை.

சர்வதேச நிதி அமைப்புகளில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் உலகப் பொருளாதாரத்தை அரசியலாக்குபவர்கள் மற்றும் வேண்டுமென்றே பொருளாதாரத் தடைகளை விதிப்பவர்கள் இறுதியில் மற்றவர்களுக்கும், தங்களுக்கும் தீங்கு விளைவிப்பார்கள். அத்துடன் உலக மக்களுக்கு பேரழிவுகளை ஏற்படுத்துவார்கள்.

சர்வதேச மேலாதிக்கம், குழு அரசியல் மற்றும் கூட்டு மோதல்கள் அனைத்தும் அமைதியையோ, நிலைத்தன்மையையோ தருவதில்லை. மாறாக போரையும், மோதலையுமே ஏற்படுத்துவதை வரலாறு காட்டுகின்றன- என்றார். (அ)

# ஆசியர் அல்லது கறுப்பினத்தவர் பாப்பரசராக வருவதற்கு வாய்ப்பு?

வத்திக்கான், ஜூன். 24



பாப்பரசர் பிரான்சிஸ் ஓய்வு பெற்றால் அடுத்த போப்பாக ஆசியா அல்லது கறுப் பினத்தைச் சேர்ந்தவர் வரக்கூடும் என்று தகவல் கள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸை சேர்ந்த கார்டினல் லூயிஸ் அன்ரனியோ ராகெல் மற்றும் கானாவைச் சேர்ந்த கார்டினல் பீற்றர் ரேர்க்சன் ஆகியோர் பாப்பரசராக வர வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது 85வயதாகும் பாப்பரசர் பிரான் சிஸூக்கு சமீபத்தில் முழங்கால் அறுவைச் சிகிச்சை நடத் தப்பட்டது.

அப்போது முதல் அவர் வெளியிடங்களுக்கு சக்கர நாற்காலி மூலம் தான் சென்று வருகிறார். இந்நிலையில் அவர் பாப்பரசர் பதவியில் இருந்து ஓய்வு பெற உள்ளதாக தகவல்கள் பரவின என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# 8 வருடங்களின் முன் பாடசாலையிலிருந்து தீவிரவாதிகள் கடத்திய 2 மாணவிகள் மீட்பு



### கூடவே குழந்தைகளும்!

அபுஜா, ஜூன். 24

நைஜீரியாவில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு போகோ ஹராம் ஜிஹாதிகளால் கடத்தப்பட்ட இரண்டு முன்னாள் பாடசாலை மாணவிகளை நைஜீரிய துருப்புக்கள் கண்டுபிடித்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள உறைவிட பாடசாலையை தாக்கிய தீவிரவாதிகள், பல மாணவிகளை கடத்திச் சென்றனர். இதில் பெருமளவானவர்கள் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள சிலரையும் மீட்கும் பணிகள் நடந்து வருகிறது.

அந்தவகையில் எஞ்சியுள்ள ஒரு சில மாணவிகளில், இருவர் செவ்வாய்க் கிழமை மீட்கப்பட்டனர். அவர்கள் இருவருக்கும் சிறு குழந்தைகள் உள்ளன.

ஜூன் 12 மற்றும் 14 ஆகிய திகதிகளில் துருப்புக்களால் இரண்டு வெவ்வேறு இடங்களில் சிறுமிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அப்பகுதியில் உள்ள துருப்புக்களின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கிறிஸ்டோபர் மூசா செய்தியாளர்களிடம் கூறினார்.

2014 ஆம் ஆண்டில் டஜன் கணக்கான போகோ ஹராம் போராளிகள் சிபோக் பெண்கள் உறைவிடப் பாடசாலையைத் தாக்கி, அந்த நேரத்தில் 12-17 வயதுடைய 276 மாணவிகளை கடத்திச் சென்றனர்.

நைஜீரிய அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த போகோ ஹராம் தளபதிகளுக்கு ஈடாக 80 பேர் விடுவிக்கப்பட்டனர். பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலர் விடுவிக்கப்பட்டனர்.

தற்போது மீட்கப்பட்டவர்களில் ஒருவரான ஹவ்வா ஜோசப், ஜூன் 12 அன்று பாமா பகுதியில் ஒரு போகோ ஹராம் முகாமை அகற்றிய பின்னர் சில குடிமக்களுடன் கண்டுபிடிக்கப்பட்டார்.

மற்றவர், மேரி டவுடா. குவோசா மாவட்டத்தில் உள்ள என்கோஷே கிராமத்திற்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்டார்.

"சிபோக்கில் உள்ள எங்கள் பாடசாலையில் இருந்து நாங்கள் கடத்தப்பட்டபோது எனக்கு ஒன்பது வயது. நான் வெகு காலத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்டேன், இந்த குழந்தை பிறந்தது" என்று ஹவ்வா ஜோசப் இராணுவ தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஜோசப்பின் கணவரும் மாமனாரும் இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அதை தொடர்ந்து, எப்படியாவது 14 மாத மகனை காப்பாற்றிக் கொள்ளுமாறு கூறி, தீவிரவாதிகள் கைவிட்டுள்ளனர்.

"நாங்கள் கைவிடப்பட்டோம், எங்களை யாரும் கவனிக்கவில்லை. எங்களுக்கு உணவளிக்கப்படவில்லை," என்று அவர் கூறினார்.

மேற்கு ஆபிரிக்க மாகாணத்தின் போட்டிக் குழுக்களுடனான மோதல், அரச படையின் தாக்குதலை தொடர்ந்து, ஆயிரக்கணக்கான போகோ ஹராம் போராளிகள் மற்றும் குடும்பங்கள் கடந்த ஆண்டு சரணடைந்தனர்.

இந்த மோதலில் 2009 முதல் 40,000 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 2.2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடத்தப்பட்டபோது 18 வயதாக இருந்த தௌடா, சம்பிசா வனப்பகுதியில் உள்ள போகோ ஹராம் போராளிகளை வெவ்வேறு காலங்களில் திருமணம் செய்து கொண்டார்.

"நீங்கள் பிரார்த்தனை செய்ய மறுத்தால் பட்டினி போடுவார்கள். உங்களை அடிப்பார்கள்," என போகோ ஹராமின் அட்டூழியங்களை பற்றி தௌடா கூறினார்.

அவர் தப்பிச் செல்ல முடிவு செய்து, கேமரூனின் எல்லைக்கு அருகில் உள்ள என்கோஷேக்கு அருகிலுள்ள டட்சே கிராமத்தில் மற்றொரு பெண்ணைப் (சிபோக் பாடசாலையிலிருந்து கடத்தப்பட்டவரே அவரும்) பார்க்கச் செல்வதாகத் தனது கணவரிடம் கூறினார்.

கிராமத்திற்கு வெளியே தனது குடும்பத்துடன் வசித்த ஒரு முதியவரின் உதவியுடன், தௌடா இரவு முழுவதும் என்கோஷேவுக்குச் சென்றார், அங்கு அவர் காலையில் துருப்புக்களிடம் சரணடைந்தார்.

"மீதமுள்ள சிபோக் பாடசாலை பெண்கள் அனைவரும் திருமணமாகி குழந்தைகளுடன் உள்ளனர். அவர்களில் 20 க்கும் மேற்பட்டவர்களை நான் சம்பிசாவில் விட்டுவிட்டேன்," என்று அவர் கூறினார். "நான் திரும்பி வந்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி."

சிபோக் பாடசாலை மாணவிகள் கடத்தலுக்குப் பிறகு ஜிஹாதிகள் வடகிழக்கில் பல பாடசாலைகளை தாக்கி மாணவிகளை கடத்தினர்.

2018 ஆம் ஆண்டில், மேற்கு ஆப்பிரிக்க யோபே மாநிலத்தில் உள்ள அரசு பெண்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் தாக்குதல் நடத்தி 110 மாணவிகளை கடத்தி சென்றனர்.

கடத்தப்பட்ட பெண்களில் ஒரே கிறிஸ்தவரான லியா ஷரிபுவைத் தவிர அனைத்து மாணவிகளும் ஒரு மாதத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டனர். லியா கிறிஸ்தவத்திலிருந்து முஸ்லிமிற்கு மதம் மாற மறுத்ததற்காக தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டார். (அ)



## சர்வதேச கிரிக்கெட் போட்டியில் ரோகித் அறிமுகமாகி 15 ஆண்டு!

*புதுடில்லி, ஜூன் 24*

இந்திய அணியின் 3 விதமான கிரிக்கெட் போட்டியிலும் அணித் தலைவராக தற்போது ரோகித் சர்மா செயல்பட்டு வருகிறார். இந்திய அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான இவர் சர்வதேச கிரிக்கெட்டில் 15 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார்.

34 வயதான ரோகித் சர்மா 2007 ஜூன் 23ஆம் திகதி அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இந்தியாவுக்காக அறிமுகமானார்.

இந்நிலையில் ரோகித் சர்மா தனது ரசிகர்கள், விமர்சகர்கள் மற்றும் கிரிக்கெட்டை விரும்புவர்களுக்காக ருவிட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், “சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக நான் அறிமுகமாகி இன்றுடன் (நேற்றுடன்) 15 வருடங்களை நிறைவு செய்கிறேன். இந்தப் பயணம் என் வாழ்வில் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக இருந்த அனைவருக்கும் நன்றி. முக்கியமாக இன்று நான் இந்த நிலையில் இருக்கக் காரணமாக இருந்த வீரர்களுக்கு மிகப் பெரிய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரிக்கெட் பிரியர்கள், ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களின் அன்பும் ஆதரவும்தான் பல்வேறு தடைகளைத் தாண்டி நான் இந்த நிலையில் இருப்பதற்கு காரணமாக இருக்கிறது - என்றுள்ளது.

ரோகித் சர்மா, 230 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய இவர் 9,283 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில், 44 அரைச்சதங்களும் 29 சதங்களும் அடங்கும். 3 இரட்டை சதங்களும் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டிகளில் 45 போட்டிகளில் விளையாடி 3137 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில், 8 சதங்களும் 14 அரைச்சதங்களும் அடக்கம்.

125 இருபது -20 போட்டிகளில் 3,313 ஓட்டங்கள் குவித்துள்ள இவர் 4 சதங்களும், 26 அரைச்சதங்களும் அடித்துள்ளார்.

ரோகித் இதுவரை 400 சர்வதேச போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடி ஒட்டுமொத்தமாக 15,000 ஓட்டங்களுக்கு மேல் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ‘தி 6க்ஸ்ரி’ கிரிக்கெட் வடிவத்தை அறிமுகம் செய்கிறது மேற்கிந்தியா

*ஜமைக்கா, ஜூன் 24*

கிரிக்கெட் விளையாட்டில் ‘தி 6க்ஸ்ரி’ ('THE 6IXTY') என்ற வடிவத்த அறிமுகம் செய்துள்ளது மேற்கிந்திய கிரிக்கெட் சபை மற்றும் கரிபியன் பிறீமியர் லீக் (CPL). இந்த வடிவம், கிரிக்கெட் விளையாட்டில் புதுப் பாய்ச்சலை கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 1877ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகில் முதல் டெஸ்ட் போட்டி விளையாடப்பட்டதாக சொல்லப்படுகிறது. அந்தப் போட்டி விளையாடப்பட்டு சுமார் 145 ஆண்டுகள் கடந்த நிலையில் ‘தி 6க்ஸ்ரி’ என்ற வடிவம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டே, ஒருநாள், இருபது - 20, பத்து - 10 என வர்த்தக வடிவம் பெற்றது. இப்போது அது மற்றொரு வடிவத்தை பெற்றுள்ளது.

‘தி 6க்ஸ்ரி’ வடிவத்தின் முதல் பதிப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள சிறந்த கிரிக்கெட் வீரர்கள் இதில் பங்கேற்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண், மகளிர் என இரு பிரிவுகளில் இந்தத் தொடர் நடத்தப்படவுள்ளது. இது பத்து - 10 வடிவத்தைக் கொண்டிருந்தாலும் தனித்துவமாக சில விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி,

துடுப்பெடுத்தாடும் அணிகளுக்கு அதிகபட்சம் 6 விக்கெட்களே வழங்கப்படும். ஆறாவது விக்கெட் வீழ்ந்தால் சகல விக்கெட்களும் இழக்கப்பட்டதாகக் கருதப்படும்.




துடுப்பெடுத்தாடும் ஒவ்வோர் அணிக்கும் 2 பவர் பிளே ஓவர்கள் உண்டு. முதல் 12 பந்துகளில் தொடர்ச்சியாக 2 சிக்ஸர்கள் விளாசினால் மூன்றாவது பவர் பிளேயை துடுப்பாட்ட அணி பெறமுடியும். இதை 3 முதல் 9ஆவது ஓவருக்குள் பயன்படுத்தலாம்.

முதல் பாதியில் 30 பந்துகளும் ஒரு பக்கத்திலிருந்தும், அடுத்த 30 பந்துகளும் மற்றொரு பக்கத்திலிருந்தும் வீசப்படும். ஓர் இனிங்ஸில் ஒரு பந்துவீச்சாளர் 2 ஓவர்கள் மட்டுமே வீச முடியும்

குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு அணிகள் 60 பந்துகளையும் வீசத் தவறினால் கடைசி 6 பந்துகளின் போது ஒரு களத்தடுப்பாளர் வெளியேற்றப்படுவார். அத்துடன், ரசிகர்கள் ஆட்டத்தின் ஒரு குறிப்பிட்ட நேரத்தை மிஸ்ட்ரி ப்றீ ஹிட்டாக தெரிவு செய்வார்கள். அந்த சமயத்தில் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டமிழக்க மாட்டார்கள். (ஐ)

## நெதர்லாந்துடனான ஒருநாள் தொடர் முழுமையாக வென்றது இங்கிலாந்து!

*ஆம்ஸ்ரர்டாம், ஜூன் 24*

நெதர்லாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து முழுமையாக கைப்பற்றியது.

நெதர்லாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணி பங்கேற்றது. இதில், இரு அணிகளுக்கும் இடையிலான முதல் 2, ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளும் மோதிய 3ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.



இதன்படி முதலில் களமிறங்கிய நெதர்லாந்து அணி 49.2 ஓவரில் 244 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந் தது. அந்த அணியில், அணித் தலைவர் எட்வர்ட்ஸ் 64 ஓட்டங்களும், பாஸ் டி லீட் 56 ஓட்டக ளும், மக்ஸ் ஒடோவ் 50 ஓட்டங்களும் எடுத்தனர்.

தொடர்ந்து, 245 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து அணிக்கு, ஆரம்ப வீரர் ஜசன் றோய் அதிரடி யாக ஆடி சதமடித்து அசத்தி அணியின் வெற்றிக்கு உதவினார். ஜோஸ் பட்லர் 86 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில், இங்கிலாந்து 30.1 ஓவரில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 248 ஓட்டங்கள் குவித்து அபார வெற்றி பெற்றது. (ஐ)



## ஐ. சி. சி. துடுப்பாட்டத் தரவரிசை 21 இடம் முன்னேறினார் தினேஷ்!

*துபாய், ஜூன் 24*

இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் தினேஷ் கார்த்திக் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி) இருபது - 20 துடுப்பாட்ட தரவரிசையில் 108 இடங்கள் முன்னேறி 87ஆவது இடம்பிடித்துள்ளார். அண்மையில், முடிந்த தென்னாபிரிக்க தொடருக்கு பின்னர் இந்த முன்னேற்றத்தை கண்டுள்ளார் அவர்.

37 வயதான தினேஷ் கார்த்திக் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இந்திய அணிக்கு மீளத் திரும்பியிருந்தார்.

தவிர்க்க முடியாத வீரராக மாறியுள்ளார் அவர். இதற்கு காரணம் அவரின் அபார துடுப்பாட்டம்.

15ஆவது ஐ. பி. எல். தொடரில் பெங்களூர் அணிக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதன் மூலம் இந்திய அணியில் இடம் பிடித்தார். இப்போது ஐ. சி. சி. துடுப்பாட்ட தரவரிசையிலும் முன்னேற்றியுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக அவர் 4 இனிங்ஸ்களில் ஆடி 92 ஓட்டங்களை சேர்த்திருந்தார். அவரின் ஓட்ட விகிதம் 158.62. இந்நிலையில், இருபது - 20 துடுப்பாட்ட தரவரிசையில் 108 இடங்கள் முன்னேறி 87ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

வரும் நாட்களில் அவர் விளையாட உள்ள இருபது - 20 போட்டிகள் மூலம் துடுப்பாட்ட தரவரிசையில் அவர் சிறப்பான முன்னேற்றத்தை அடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# எரிபொருள் கிடைக்க ஒத்துழைக்காவிட்டால் சுகாதார சேவை முற்றாக முடங்கும் அபாயம்

## யாழ்.போதனா தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

**எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படுமென யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.**

யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் அனைவருக்குமான ஒரே ஒரு போதனா வைத்தியசாலையாக இருக்கும் எமது வைத்தியசாலை ஆளணிப் பற்றாக்குறை இருந்தபோதும் சிறப்பாக சேவையாற்றி வருவது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் அண்மைக் காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது எல்லோரையும்போல் எம்மையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அதிலும் எரிபொருள் இன்மை காரணமாகவும், அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் வைத்திய சேவை முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளது. இதை அனைவரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆனாலும் சில குறுகிய நோக்கம் உள்ள, மனிதநேயம் அற்ற சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை உருவாக்கி வைத்தியசாலை ஊழியர்கள் எரிபொருள் பெறுவதை தடுப்பதன் மூலம் இன்பம் காண்கின்றனர்.

இருப்பினும் சுகாதார அமைச்சு வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு எரி பொருள் கிடைப்பதை உறுதி செய்யும் முகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைத்தியசாலை மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் எரிபொருளை. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங் கும் முடிவை எடுத்துள்ளது.

இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாக இருப்பினும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு அரச அதிபரும், பிரதேச செயலர்களும், பொலீஸ் மற்றும் பாதுகாப்பு துறையினரும் மனப்பூர்வமாக முன்வரவேண்டும்.

அவ்வாறு இல்லையெனில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே பொது மக்களையும் உரிய தரப்பினரையும் உணர்ந்து செயற்பட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்-என்றுள்ளது. (அ-03)







# ஐ.நா. அலுவலகம் முன்பாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூன் 24

கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

முறையற்ற கைதுகளை தவிர்க்கவேண்டும், எரிபொருள் வரிசைகளில் நீண்ட நேரம் காத்திரும் மக்களுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முறுகலில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் போன்ற விடயங்களை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் ஐ.நா அலுவகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களினால் மகஜரொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

# நன்கொடை மருந்துகளை இலவசமாக எடுத்துவரும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்!

கொழும்பு, ஜூன் 24

நன்கொடையாளர்களால் வழங்கப்படும் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை, இலங்கைக்கு கொண்டுவந்து சேர்க்கும் பணியை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆரம்பித்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ின் சமூக பொறுப்புணர்வுப் பிரிவான ஸ்ரீலங்கன் கேர்ஸ் மூலமாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கமைய, பிரான்ஸ், இந்தோனேசியா, ஐக்கிய இராச்சியம், மலேசியா, குவைத் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் உள்ள நன்கொடையாளர்களால் வழங்கப்படும் மருத்துவப் பொருட்களை தொடர்ச்சியாக இலங்கைக்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வாகன இறக்குமதிக்கான உரிமம்

கொழும்பு, ஜூன் 24

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்கள், இலங்கைக்கு சட்டரீதியாக பணம் அனுப்பும் போது அவர்கள் அனுப்பும் தொகையின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கக்கப்படும் என்று கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாடுகளில் பணி புரியும் இலங்கை தொழிலாளர்களுக்கு வரியில்லாச் சலுகையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால்இ வங்கி முறையின் மூலம் சட்டரீதியாக பணம் அனுப்பும் வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படும்-என்றார். (அ)

# வவுனியாவில் காணாமல்போனோரின் உறவுகளால் போராட்டம் முன்னெடுப்பு!

வவுனியா, ஜூன் 24

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா ஏ-9 வீதி, தபால் திணைக்கள அலுவலகத்துக்கு அருகாமையில் கொட்டகை அமைத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டமானது 1950ஆவது நாளான நேற்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார்-

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைக் கண்டுபிடிக்கக் கோரி எமது தொடர் போராட்டம் இன்று 1950 ஆவது நாளாகும். இந்தப் பந்த லில், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா வந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிய உதவும் வரை எங்களது போராட்டம் தொடரும்.

சுதந்திரம் அடைந்ததில் இருந்து இலங்கை ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளது. உணவு இல்லை, எரிபொருள் இல்லை, மருந்து இல்லை மற்றும் பிற அத்தியா வசிய தேவைகள் விநியோகத்தில் குறைவு.

இலங்கை நாளுக்கு நாள் பிழைப்புக்காக போராடிக் கொண்டிருக்கிறது. உலகின் பிற பகுதிகளும் பணவீக்கம், தேவைப்படும் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உக்ரைன்-ரஷ்ய போர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன.

எதற்கும் நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கை உள்ளது. இந்த பொருளாதார நெருக்கடி சிங்கள அரசாங்கத்தை பலவீனப்படுத்திகொள்கிறது.

1957 இலிருந்து சிங்களவர்கள் எமக்கு இழைத்த ஒவ்வொரு அட்டூழியத்தின் அடிப்படையிலும், எமது தாயகத்தில் தமிழர்களின் பிழைப்புக்கும் வாழ்வாதாரத்திற்கும் சிங்களவர்கள் எதிரிகளாக இருந்து வருகின்றனர்.

இப்போது நம் எதிரி பிரச்னையில் மிகவும் பலவீனமாக இருக்கிறான். அழிந்து வரும் இலங்கையில் இருந்து எங்களை விடுவிக்க இதுவே சிறந்த நேரம்.

நமது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்றுபட்ட பிரேரணையை முன்வைக்கும் நேரம் இது. எங்களின் எதிர் காலத்தை தீர்மானிக்க பொது வாக்கெடுப்பு நடத்தலாம்.

புலம்பெயர் தமிழ் மக்கள், எமது தமிழ் எம்.பி.க்கள் பல நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்தனர். ஆனால் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பொருளாதார நெருக்கடி முடியும்வரை எங்களை அமைதியாக இருக்குமாறு பயத்துடன் கேட்டுக் கொண்டனர்.

நமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆக்கபூர்வமான சிந்தனை இல்லை என்றும், அரசியல் விடுதலையை விரும் பாதவர்கள் என்றும் இது காட்டுகிறது-என்றார். (அ)



# மல்லாகம் புத்தக கண்காட்சி இரண்டாம் நாள் நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தலைப்பில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறுகின்ற புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாளான நாளை சனிக்கிழமை அன்று ஈழத்து இலக்கியங்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வின் இரண்டாவது அமர்வு அண்மையில் காலமான எழுத்தாளரும் ஆசிரியருமான மயிலங்கூடலூர் பி. நடராஜன் (ஆடலிறை) நினைவாக இடம்பெறவுள்ளது.

ஆசிரியரும் ஆய்வாளருமான சி. ரமேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த அரங்கில் நூல்களின் அறிமுக உரைகளை ஆசி. கந்தராஜா "பணச் சடங்கு" சிறுகதைத் தொகுப்பு தொடர்பாக எழுத்தாளரும் கட்டடக் கலைஞருமான இ.மயூரநாதன், கலாநிதி க.குணேஸ்வரனால் தொகுக்கப்பட்ட தேவகாந்தனின் தேர்ந்த கதைகளின் தொகுப்பான "பின்னல் பையன்" நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன், அருட்தந்தை ஜோசுவா, "பாதி உயிர் கருப்பன்சாமி கதை" நூல் தொடர்பாக ஆசிரிய ஆலோசகரும் எழுத்தாளருமான பா.மகாலிங்கசிவம் அவர்களும் ஆற்றவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பை விவாதியான இ. கார்த்தியாயினி மேற்கொள்வார்.

அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் சண் நாடகக் குழுவினரின் அங்கிடுதத்தி, என்னவென்று சொல் வேனடி ஆகிய நகைச்சுவை நாடகங்கள் அரங்கேற உள்ளன.

இந்தப் புத்தக அரங்க விழாவை யொட்டி குறித்த சனி, ஞாயிற்றுகிழமைகளில் காலை 8.30 தொடக்கம் மாலை 5 மணி வரையும் புத்தகப் பண்பாட்டுப் பேரவையினரின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த முற்போக்கான மக்கள் கலை இலக்கிய முன்னெடுப்பில் ஆர்வமுள்ள அனைவரையும் இணையுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# வரிசைகளை ஒழிக்க 21 மிகவும் அவசியம்!

ஓமல்பே சோபித தேரர்


கொழும்பு, ஜூன் 24

இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வரிசைகளை இல்லாதொழிக்க அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் மிகவும் அவசியம் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"21 ஆவது திருத்தச் சட்டம் தின்பதற்கா எனப் பலரும் கேட்கிறார்கள். ஆம், தின்பதற்குத்தான். இன்று வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாமல் இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் நிற்கின்றார்கள்.

21ஆவது திருத்தச் சட்டம் ஊடாகவே அரசியல் ஸ்திரத்தன்மை நாட்டில் ஏற்படும். அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டாலே மாத்திரமே



பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். இதனூடாகவே நாட்டில் வரிசைகளை இல்லாதொழிக்க முடியும்" - என்றார். (ஐ)

# எயிட்ஸ் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, ஜூன் 24

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 20 எயிட்ஸ் தொற்றாளிகள் பதிவாகியுள்ளனர். இதில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் 20 முதல் 49 வயது வரையானவர்கள் என்றுதேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களை விடவும் இளம் வயதினர் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது. இது ஓர் ஆபத்தான நிலை எனவும், கூடுதல் எண்ணிக்கையிலான தொற்றாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், கடந்த ஆண்டில் 439 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகினர் என்றும் அவர் கூறினார். அறிமுகம் இல்லாதவர்களுடன் பாலுறவு கொள்ளும் போது பாதுகாப்பான வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# திங்கள் முதல் பாடசாலைகளை தொடங்க கல்வி அமைச்சு திட்டம்!

கொழும்பு, ஜூன் 24

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

பாடசாலைகள் நடத்தப்படும் முறை தொடர்பில் இன்றைய தினம் மாகாண மட்டத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த பேச்சின் பின்னர், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமை போன்று பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நேற்றுமுன்தினம் பல பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகை 65 வீதமாக பதிவாகியுள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)



## ஜப்பான்...

கிராமங்களின் பிள்ளைகளுக்கு புத்தகங்களை விநியோகிக்கிறார்.

ஜப்பானியக் கல்வி அதிகாரிகள் அவரின் சேவையைப் பாராட்டி குழந்தைகளுக்கு அவரின் பாடத்தை வாசிக்கக் கற்றுக்கொடுக்கிறார்கள். (ஐ)

## எரிவாயு...

பாடு நிலவுகிறது. இந்நிலையிலேயே, எதிர்வரும் ஜூலை 5ஆம் 12ஆம் திகதிகளில் எரிவாயுடன் இரு கப்பல்கள் நாட்டை வந்தடையும் என்று லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

## மக்களின்...

துக்கு எவ்வித பதிலும் இல்லை எனவும், ஜனாதிபதியும் பிரதமரும் தயக்கமின்றி பதிலளிக்க வேண்டும் எனவும், எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர உடனடியாக ரஷ்ய நாட்டுடன் கலந்துரையாட வேண்டும் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பெறும் பொறுப்பை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரிடம் ஒப்படைக்காமல் ஜனாதிபதியும், அரசாங்கமும் அதை செய்ய வேண்டும். எதிர்வரும் காலங்களில் ஜப்பான், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக இருக்கின்றன என்று தெரிவித்த நாணயக்கார, ரஷ்யாவும் இந்தக் குழுவில் இணையலாம் என்றும் கூறினார்.

ரஷ்யாவில் எரிபொருள், உரம் மற்றும் எரிவாயு உள்ளது. இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்ய இலங்கை அஞ்சுவதாகவும், அரசாங்கம் தொடர்ந்தும் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால் மக்கள் பொறுமை இழப்பார்கள் எனவும் நாணயக்கார தெரிவித்தார்.

## அமைச்சர்கள்...

அரசியல்வாதிகள் குறிப்பாக, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் காப்புறுதி செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். (ஐ)

## நெருக்கடியைச்...

கும் இந்திய மக்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து கலந்துரையாடினர். (அ)

## நடந்தது...

சியை பிரதிநிதித்துவம் செய்யும் நான்கு உறுப்பினர்களும் கூட்டாக இது குறித்து தகவல் வெளியிட்டனர்.

இறுதிப் போரின் போது இடம்பெற்றது இனப் படுகொலையே என்று 22ஆம் திகதி நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக பிரதேச சபை உறுப்பினர்கள் தகவல் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே, தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்படவில்லை என்றும், தாம் இந்தத் தீர்மானத்தை ஏற்கவில்லை என்றும் இது உண்மைக்கு புறம்பான செய்தி எனவும் ஈ. பி. டி. பியின் நான்கு உறுப்பினர்களும் தெரிவித்தனர். (ஐ)

## எரிபொருட்கள்...

உலக சந்தையில் டொலரின் பெறுமதி மற்றும் விலை அதிகரிப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த விலையுயர்வு நடைமுறைக்கு வருகின்றது. இந்த விலைச் சூத்திரம் ஒவ்வொரு மாதமும் 24ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எரிபொருள்...

உடுவில் - செப்பாலை கோயிலடியை சேர்ந்த செல்வ ரத்தினம் பிரசாந்த (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மரணமான இளைஞர் ஊடக பயிலுநர் நண்பர் ஒருவருடன் யாழ். மாநகரில் உள்ள மணிக்கூட்டு வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்றுள்ளார். அப்போது வரிசையில் சிலர் புகுந்ததை ஊடக பயிலுநர் காணொலியாக பதிவு செய்துள்ளார். அவரை எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையார் மறித்து தாக்கியுள்ளார்.

நண்பரை தாக்கியதை மறித்து நியாயம் கேட்க சென்ற இவரையும் மூவர் தலைக்கவசத்தால் தாக்கியுள்ளனர். இதன்போது, இளைஞனின் வாய், மூக்கு வழியாக குருதி ஓடியுள்ளது. அங்கிருந்து வீடு சென்ற இளைஞருக்கு மறுநாள் நெஞ்சுவலி, உடல்சோர்வு ஏற்படவே உடனடியாக அவரின் குடும்பத்தவர்கள் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

எனினும், இரு நாட்களின் பின்னர் அந்த சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரின் மரணத்துக்கு மாரடைப்பே காரணம் என்று உடற்கூற்றுப் பகுப்பாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## குருந்தூர்...

நீதிமன்றக் கட்டளையை மீறி அங்கு அமைக்கப்பட்ட விகாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர், குருந்தூர்மலை தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை, கடந்த 16ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் அனைத்து, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தவகையில் வழக்கை ஆராய்ந்த நீதிவான் ரி. சரவணராஜா, குருந்தூர் மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில், பொலிஸாரிடம் விளக்கம் கோரி வழக்கை நேற்றைய தினமான 23ஆம் திகதிக்கு அழைத்திருந்தார்.

இது தொடர்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உட்பட்டோர் நேற்று நீதிமன்றிலே முன்னிலையாகி விளக்கமளித்தனர். இதனடிப்படையில் குருந்தூர் மலையில் விகாரையைக் கட்டிய நபர்கள், அவ்வாறு விகாரையைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கு எத்தனித்த ஆவணங்களை மாத்திரம் பொலிஸார் மன்றில் சமர்ப்பித்தனர்.

இதற்கு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீறப்பட்டுள்ளதைத் தெளிவுபடுத்தினர்.

அந்தவகையில் இது தொடர்பில் மேலதிகமாக அறிக்கையை நீதிமன்றத்துக்கு வழங்க, தமக்கு தவணை வேண்டும் என்று பொலிஸார் நீதிவானிடம் கேட்டனர். இதற்கமைய வழக்கை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# பெற்றோல் விநியோகித்த தாதி வசமாக சிக்கினார்!

கொழும்பு, ஜுன் 24

மெதிரிகிரிய வைத்தியசாலையின் தாதி ஒருவர் மெதிரிகிரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்பிக் கொண்டு சென்று, அதை வேறொருவருக்கு விநியோகிக்கும் காட்சி வெளியாகியுள்ளது.

மெதிரிகிரிய கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு 10 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் எரிபொருள் கிடைத்துள்ளது.

மெதிரிகிரிய பிரதேச செயலாளர் இந்திக்க கருணாரத்ன மற்றும் மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அனுரசிறி ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் மெதிரிகிரிய வைத்தியசாலையின் அனைத்து ஊழியர்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்கான விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மெதிரிகிரிய வைத்தியசாலையின் தாதி ஒருவர் சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்தி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை எடுத்துக்கொண்டு சுமார் 20 மீற்றர் தூரம் சென்று மற்றொரு நபரின் உதவியுடன் கொள்கலனுக்குள் எரிபொருளை அகற்றிய சம்பவம் தொடர்பில் மெதிரிகிரிய பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மெதிரிகிரிய பிரதேச செயலகத்தின் எந்தவொரு ஊழியரும் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க எரிபொருள் பெற்றுக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை ஊழியர்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்கு முன்னுரிமை வழங்கப்படாமல் விடுவது வைத்தியசாலையின் செயற்பாடுகளை சீர்குலைப்பதாகவும், அது மக்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இப்படிப்பட்ட சூழலில், இதுபோன்ற செயல்களை சமூகம் ஏற்காது என்று பலர் கூறினர்.

இது தொடர்பில் மெதிரிகிய ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் அனுரசிரியிடம் வினவிய போது, இந்த மோசடியில் ஈடுபட்ட சிறு ஊழியர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளார். இது தொடர்பாக மாவட்ட மருத்துவ கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொலிஸ்-இராணுவம் கைகலப்பு

கொழும்பு, ஜுன் 24

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் இராணுவ அதிகாரி ஒருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

வரக்காபொல, தும்மலதெனிய பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியுள்ளது.

வாக்குவாதத்தைத் தொடர்ந்து இராணுவ அதிகாரி பொலிஸ் அதிகாரியைத் தாக்கியமை பெற்றோல் நிலையத்தில் உள்ள சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வரக்காபொல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி வரக்காபொல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

## பிணையில் விடுவிக்கப்பட்டவர் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு

காத்தான்குடி, ஜுன் 24

பிணையில் விடுவிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் மட்டக்களப்பில் சடலமாக மீட்கப்பட்டார்.

மட்டக்களப்பு - காத்தான்குடியை சேர்ந்த பதுர்தீன் சுபைக் அகமட் (வயது 23) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மரணமான இளைஞர் 40 நாட்களுக்கு முன்னரே மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு நித்திரைக்கு சென்றவர் மறுநாள் காலை எழும்பவில்லை. அவரை சோதித்தபோது, அவர் உயிரிழந்தமை தெரிய வந்தது.

இதையடுத்து, பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தர வின்படி பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ஐ)

## பிரிட்டன் செல்ல முயன்ற வவுனியா இளைஞர் கைது!

கொழும்பு, ஜுன் 24

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் போலி விஸா மற்றும் கடவுச்சீட்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி விஸா மற்றும் கடவுச்சீட்டுடன் லண்டன் செல்ல முற்பட்டவேளையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ)

## 1,400 லீற்றர் டீசலைப் பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் கைது

கொழும்பு, ஜுன் 24

கொட்டாவ, மாகும்புர பகுதியில் சட்டவிரோதமாக 1,400 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த நபரின் வீட்டின் மாடியிலிருந்து, 500 லீற்றர் தொட்டியும், அவரது வணிக வளாகத்தில் மற்றொரு சிமிலேட் தொட்டியுமாக இரண்டு டீசல் பீப்பாய்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த சந்தேகநபர் ஹோமாகம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

அக்கரைப்பற்று, ஜுன் 24

வீடு ஒன்றில் வர்ணம் பூசிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நேற்று வியாழக்கிழமை அம்பாறை - அக்கரைப்பற்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முகைதீன்பாவா அப்துல் காதர் சாபிக் அபான் (வயது 17) என்பவரே மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

அவர் வீடு ஒன்றின் மேல் மாடியில் சுவருக்கான வர்ணம் பூசும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே மின்சாரம் தாக்கிப் பலியானார் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# இந்திய நிவாரண பங்கீட்டுக்கு கப்பம் விசாரணைக்கு இ.தொ.கா. வலியுறுத்து

கொழும்பு, ஜுன் 24

ஹப்புதளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிட்ராத்மலை தோட்டத்தில் இந்திய அரசினால் நிவாரணமாக வழங்கப்பட்ட பால் மாவை பகிர்ந்தளிக்கும் செயல்பாட்டில் போக்குவரத்து செலவுக்கென பிரதேச சபையைச் சேர்ந்த சிலரால் 50 ரூபா பொதுமக்களிடம் அறவிடும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கு எதிராக ஆளுநரின் செயலாளரிடம் உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பதுளை மாவட்ட செயலாளர், ஹப்புத்தளை பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் விசாரணை அறிக்கையும் கோரியுள்ளார்.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் உணவு ஆணைக்குழுவின் ஊடாக மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் தோட்ட நிர்வாகத்தின் ஊடாக மக்களைச் சென்றடைய இ.தொ.காவால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியா அரசின் அனுசரணையில் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை இலங்கைத் துறைமுகத்திற்கு வந்தடையும் வரை தேவை யான ஏற்பாடுகள் இந்திய அரசு வழங்கி இருந்தது. துறைமுகத்தில் இருந்து நிவாரணப் பொருட்களை விடுவித்து ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப் பதற்காக 400 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமான செலவுகள் திறை சேரியின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிவாரணப் பொருட்கள் மக்களின் வீட்டு வாசல் வரை கொண்டு சேர்க்கப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் இலவசமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக மேலதிகமாக நிதி வசூலித்தால் எவரும் கொடுக்க வேண்டாம் எனவும், அவ்வாறு நிதி வசூலிப்பவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். (அ)



## சட்டவிரோதமாக இறக்கப்பட்ட 5 சொகுவாகனங்கள் பறிமுதல்!

கொழும்பு, ஜுன் 24

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து சொகுசு வாகனங்களை சுங்க திணைக் களம் கைப்பற்றியுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனங்களில் பி. எம். டபிள்யூ, மெர்சிடெஸ் மற்றும் ஆடி கார்கள் உள்ளடங்குகின்றன சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து உதிரிப் பாகங்கள் என்ற போர்வையில் இந்த வாகனங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஒருகொடவத்தையில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் இருந்து இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என்று சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதனிடையே, இலங்கைக்கு சட்ட விரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 50 மில்லியன் ரூபாய்க்கு மேல் பெறுமதிக் கொண்ட தடை செய்யப்பட்ட பொருட்களையும் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

அந்த வகையில், தடைசெய்யப்பட்ட பொருட்களில் 40,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள 2,500 போத்தல் விஸ்கி, இயந்திர எண்ணெய், அழகு சாதனப் பொருட்கள், மஞ்சள் மற்றும் லைற்றர்கள் ஆகியவை அடங்கும். வத்தளை சரக்கு அகற்றும் நிலையத்தில் இரண்டு கொள்கலன்களில் இருந்து இந்த பொருட்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் டிவி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு